திருவும் தெள்ளிய அறிவும்

நகரத்தார் குரல்

சமூக இலக்கிய மாத இதழ்

மார்ச் 2000

ஆசிரியர்
வி.என். சிதம்பரம்



- நெற்குப்பை
சுப.அ.பழ. அடைக்கப்பச் செட்டியார்



தரமான பட்டு, பாரம்பரியப் பட்டு,
ராஜ்மஹால்-ன்
ராசியானபட்டு.
அனைத்து ரக பட்டு மற்றும்
ஃபேன்சி பட்டு சேலைகளுக்கு
ராஜ்மஹால்
37, வெங்கலக் கடைத் தெரு, மதுரை—625001. போன்: 622647
தொட்டுத் தொடரும் ஒரு பட்டுப் பாரம்பரியம்
SASI / MDU / 99

நகரத்தார் குரல்

சமூக இலக்கிய மாத இதழ்

குரல் 19
ஒலி 2

பிரமாதி
பங்குனி

மார்ச்
2000

ஆசிரியர்
வி.என். சிதம்பரம் செட்டியார்

உள்ளே ...

108–109, நேதாஜி சாலை, அறை எண். 12, மாடி
மதுரை – 625 001. தொலைபேசி: 746206

நகரத்தார்குரல் சந்தா படிவம்

நான் நகரத்தார்குரல் திங்களிதழின் சந்தாதாரராக விரும்புகிறேன். ஆண்டு சந்தா ரூ. 60-00 / ஆயுள் (டெபாசிட்) சந்தா ரூ. 500-00 (ரூபாய் .... மட்டும்) பணவிடைத்தாள் (எம்.ஓ) கேட்புவரைவோலை (டிமாண்ட் டிராஃப்ட்) 'நகரத்தார்குரல்' என்ற பெயருக்கு அனுப்பியுள்ளேன்.

சந்தாதாரர் முகவரி ....

....

....

படிவம் அனுப்பப்படவேண்டிய முகவரி:

ஆசிரியர், நகரத்தார்குரல்

108-109, நேதாஜி ரோடு, மதுரை - 625 001. போன்: 746206

வெளிநாடு ஆண்டு சந்தா ரூ. 600-00

வெளிநாடு ஆயுள் சந்தா ரூ. 3,000-00

விளம்பரக்கட்டணம்

வெளி அட்டை (கலர்)	ரூ. 3000.00	அரைப்பக்கம்	ரூ. 500.00
உள் அட்டை (கலர்)	ரூ. 2000.00	கால் பக்கம்	ரூ. 250.00
முழுப்பக்கம்	ரூ. 1000.00		

தொகை M.O. D/D. மூலமாக அனுப்பலாம். D/D. M.O அனுப்புபவர்கள் **"V.N. Chidambaram, Nagarathar Kural"** என்ற பெயரில் அனுப்ப வேண்டும். தபால் செலவு, பேப்பர் செலவுகள் அதிகரித்து விட்டதால் கட்டணங்களை உயர்த்தும் சூழ்நிலை ஏற்பட்டது. வாசகர்கள், விளம்பரதாரர்கள் தொடர்ந்து ஆதரவு தர வேண்டுகிறோம்.

- ஆசிரியர்

ஆசிரியர் பக்கம் **வி.என். சிதம்பரம்**

பெருமைக்குரிய நகரத்தார்

ராஜா சர் அண்ணாமலை செட்டியார் ராணி சீதையம்மாள் ஆச்சி தம்பதியரின் மூன்றாவது இளவரசர் எம்.ஏ. சிதம்பரம் செட்டியார் அவர்கள். புகழ்மிக்க செட்டிநாட்டில் அரசபரம்பரையைச் சேர்ந்தவர் என்றாலும் ஆடம்பரமோ, படாடோபமோ இல்லாத ஆழ்கடலின் அமைதியே உருவானவர் எம்.ஏ. சிதம்பரம் செட்டியார் அவர்கள். தைப்பூச திருநாளில் ஜோதியாய் ஒளிர்ந்தார். அவரைப் பற்றி நான் அறிந்த செய்திகளை வாசகர்களோடு பகிர்ந்து கொள்ள விழைகிறேன்.

அவரின் சிறுவயதில் பள்ளிக்கூடத்தில் படித்த அந்தச் சிறுபிராயத்திலேயே அவர் தந்தையார் அரசர் அண்ணாமலை செட்டியார் அவர்கள் அறிவுரை சொல்வாராம். என்ன அறிவுரை தெரியுமா...?

"சிதம்பரம் நீ பள்ளிக்குக் காரில் செல்லக்கூடாது. சைக்கிளிலோ அல்லது குதிரைவண்டியிலோதான் செல்லவேண்டும். அப்போதுதான் வெளிஉலகத்தில் உள்ள கஷ்டநஷ்டங்களை நீ மிகவும் அருகிலிருந்து பார்க்கலாம்" என்ற அரசரின் அறிவுரையை மீறாத குணம் கொண்டவராக தந்தை சொல்மிக்க மந்திரமில்லை என்ற தத்துவத்தைக் கடைப்பிடித்து வந்தது அவரின் சிறப்புகளிலெல்லாம் பெரும் சிறப்பு...

இன்றைய பெரும்பாலான நடுத்தரக் குடும்பத்தினர்கூட, பள்ளிக்கோ அல்லது கல்லூரிக்கோ காரில்தான் செல்கிறார்கள். ஆனால் அரசபரம்பரையினரின் பெருந்தன்மைக்கு பெரியவர் எம்ஏசிடி ஓர் உதாரணபுருஷர் அல்லவா..?

ஓர் இருபது ஆண்டுகளுக்கு முன்னதாக நானும் இன்னும் சில நண்பர்களும் அவரைக் காண சென்றோம். எதற்காக தெரியுமா...? நகரத்தார்களைப் பாதிக்கும் விதமான ஒரு அவசரச்சட்டத்தினை அப்போதைய பிரதமராக இருந்த இந்திராகாந்தி அவர்கள் பிறப்பித்திருந்தார்கள். வட்டிச்சட்டம். அந்த சட்டத்தினை எதிர்த்து சென்னையில் வட்டிக்கடைக் கூட்டமைப்பு என்று ஓர் அமைப்பை நிறுவி மாநாடெல்லாம் நடத்தினோம். அப்போதைய தமிழக அமைச்சராகயிருந்த அண்ணன் ஆர்.எம்.வீ. அவர்கள்கூட அந்த மாநாட்டில் வந்து கலந்து கொண்டார்கள்.

பிரதமர் இந்திராகாந்தி அவர்களுடன் பெரியவர் எம்ஏசிடி. அவர்கள் நல்ல நட்பு கொண்டிருந்தார்கள் அதனால் அவர் மூலம் சொல்லி அந்தச் சட்டத்தினை திரும்பப்பெறச் செய்யவேண்டும் என்ற கோரிக்கையோடு கூட்டமைப்பின் குழுவினரோடு நானும் சென்றிருந்தேன். நாங்கள் சொல்வதையெல்லாம் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தவாறு அவர் சொன்னார், "நாங்கள் இன்றுதான் இண்டஸ்ட்ரி, நவீன தொழில் என்று தொடங்கியிருக்கிறோம். என் முன்னோர்கள் எல்லாம் பர்மா, சிங்கப்பூர் நாடுகளில் வட்டித்தொழில்தான் செய்து வந்தார்கள். அதனால் நானும் இந்தச் சட்டத்தினால் ஏற்படும் கஷ்டங்களை நன்கு அறிவேன். மனப்பூர்வமாகவும் உணருகிறேன் வட்டியே. போனாலும் பரவாயில்லை. அசலும் போனால் என்னாவது...? ஆகவே எனக்கு அந்த அவசரச் சட்டத்தில் உடன்பாடில்லை" என்று சொல்லிவிட்டு ஓர் உதாரணத்தைச் சொன்னார்



அன்றைய சென்னை மேயர் எம்.ஏ. சிதம்பரம் செட்டியார், ஜவஹர்லால் நேரு, பெருந்தலைவர் காமராஜர், மொரார்ஜி தேசாய் மற்றும் பலர்...

இப்போது எங்கள் கெஸ்ட்ஹவுசில் ஒரு கம்யூனிஸ்ட் தலைவர் தங்கிச் சென்றார். நான் பெயர் சொல்ல விரும்பவில்லை. அந்த அறையைப் போய்ப் பாருங்கள். குளிர்சாதன வசதிகொண்ட அறை. பாரின் சென்ட் வாசனையோடு தங்கியிருந்தார். அவரைத் தொழிலாளரின் தோழர் என்கிறார்கள்.

நான் ஆயிரக்கணககான தொழிலாளர்களுக்கு வேலையும் கொடுத்து அவர்களின் குடும்பத்தையும் வாழ வைக்கிறேன். ஆனால் என்னை முதலாளித்துவம் கொண்டவர் என்கிறார்கள் முதலாளித்துவத்தை அனுபவிக்கும் ஒரு தொழிலாளர் சங்கத்தலைவரை கம்யூனிஸ்ட் என்கிறார்கள். அவருக்கு உள்ள மரியாதையே தனி. காரில் அவர் போய் இறங்கினால் தொழிலாளியின் உரிமை காத்த வீரர் வாழ்க! வாழ்க! என்ற கோஷங்கள் விண்ணைப் பிளக்கும். நான் காரில் சென்று இறங்கினால் முதலாளித்துவம் ஒழிக! ஒழிக! என்ற கோஷங்களோடு வரவேற்கிறார்கள். நான் கம்யூனிஸ்ட் கொள்கையை குறை சொல்வதாக அர்த்தமல்ல இது. கம்யூனிஸ்ட் கொள்கையை கையாளும் முறையில்தான் பிரச்சனையே வருகிறது.

அதைப்போலவே 'பைனான்ஸ்' என்று ஆங்கிலத்தில் போர்டை மாட்டிக் கொண்டு. ஏ ஸி அறையில். கோட் சூட் என்று தோரணையாக டேபிள். சேரைப் போட்டுக் கொண்டு வட்டி வசூல் செய்கிறான் அது பெரிய பைனான்ஸ் நிறுவனம் என்று சொல்கிறார்கள். ஆனால் அந்த நிறுவனம் மக்களை ஏமாற்றுகிறது. சுரண்டுகிறது என்பதை அறியாமல் பெரிய நிதிநிறுவனம் என்கிறார்கள்.

நாம ஒரு பொட்டியை மட்டும் வைத்துக் கொண்டு வேட்டியைக் கட்டிக்கொண்டு ஆண்டவனுக்குப் பயந்து குறைந்த வட்டிக்கு கடன்கொடுத்து பலபேர் உயர்வதற்குக் காரணமாக இருக்கிறோம். ஆனால் பைனான்ஸ் போன்ற மோசடி நிறுவனங்களைப் பாதிக்கக்கூடிய இந்த அவசரச்சட்டம் உண்மையாக நேர்மையாக தொழில் செய்யும் நம் நகரத்தார்களையும் பாதிக்கிறது என்று கூறிவிட்டு பிரதமரை சந்தித்து கோரிக்கை வைக்கிறேன் என்று உறுதியளித்தவர் பெரியவர் எம்ஏசிடி. அவர்கள்.

இப்படி இன்னும் எத்தனையோ நற்குணங்களைக் கொண்ட பெருமைக்குரிய நகரத்தார் எம்ஏசிடி அவர்கள் என்று பூரிக்கும் வேளையில் அவரை இழந்து விட்ட துயர் துடைக்க. மனக்குமுறலை அடக்க அவரின் நினைவுகளே திரும்ப திரும்ப வருகிறது.

இன்னொரு நிகழ்வும் நினைவுக்கு வருகிறது. அடுத்த இதழில் சொல்லுகிறேன்.

சுவீகாரம் மற்றும் முதல் பிறந்தநாள்



மதுரை நகர் மாவட்ட காங்கிரஸ் பொதுச்செயலாளர், கண்ணதாசன் நற்பணி மன்றத்தலைவர் மற்றும் பல்வேறு அமைப்புகளில் தலைவராக பணியாற்றிவரும் விஜயா பிரிண்டர்ஸ் நிர்வாக பங்குதாரர் ஆர். சொக்கலிங்கம் அவர்களின் சுவீகாரப் புதல்வன் சொ. ராம்குமார் முதல் பிறந்தநாள் விழா 2-2-2000 அன்று மதுரை-6, திருநகர், காமாட்சி அரங்கில் காலையில் உறவினர்களும் மாலையில் நண்பர்கள் அரசியல் பிரமுகர்கள் கலந்து கொள்ளும்படி நடந்தது. காங்கிரஸ் தலைவர் நெல்லை கண்ணன், மதுரை எம்.பி. பி. மோகன், த.மா.கா. பொதுச்செயலர் தமிழருவிமணியன், தொழிலதிபர் கருமுத்து டி. கண்ணன், த.மா.கா. நாடாளுமன்றக்குழு முன்னாள் தலைவர் என்.எஸ்.வி.சித்தன், கோ. தளபதி, எம்.எல்.ஏ., ரஜினி மன்ற பிரான்சிஸ் பாஸ்டின், பாலதம்புராஜ் மற்றும் அ.தி.மு.க., தி.மு.க., ம.தி.மு.க., தி.க., பி.ஜே.பி., சி.பி.எம்., மு.மு.க., முஸ்லீம் லீக் தலைவர்கள், சாலமன் பாப்பையா, கு. ஞானசம்பந்தன் குடும்பத்தினர், இலக்கிய, பொது அமைப்பு, நகரத்தார் நண்பர்கள் பெரும் திரளாக கலந்து கொண்டு வாழ்த்தினர். ஆர். சொக்கலிங்கம் - அலமேலு சொக்கலிங்கம் மற்றும் குடும்பத்தினர் அனைவரையும் வரவேற்று உபசரித்தனர்.

மறைந்த மாமனிதர்
எம்.ஏ. சிதம்பரம் செட்டியாரைப் பற்றி இவர்கள்...



இந்தியாவில் தொழில் வளர்ச்சிக்குப் பெரிதும் பாடுபட்டவர் சிதம்பரம். விளையாட்டு, கலை ஆகியவற்றுக்கும் பாடுபட்டவர்.

- **வாஜ்பேயி**, இந்தியப்பிரதமர்.

தென்னிந்திய வர்த்தக சபையின் தலைவர், சென்னை மாநகராட்சியின் மேயர், பிலிப்பைன்ஸ் நாட்டு கௌரவத்தூதர், இந்திய கிரிக்கெட் போர்டின் தலைவர், இந்திய டென்னிஸ் சங்கத்தலைவர், தமிழிசைச் சங்கத்தின் கௌரவச் செயலாளர் போன்ற பல்வேறு பதவிகளில் அமர்ந்து சிறப்பாகப் பணியாற்றி அப்பதவிகளுக்குப் பெருமை சேர்த்துள்ளவர் தொழிலதிபர் எம்.ஏ. சிதம்பரம் அவர்கள். ஆசியாவில் மிகப்பெரியதான தூத்துக்குடி ஸ்பிக் உர ஆலை இவரது திறமைக்குச் சான்றாகத் திகழ்கிறது.

- **கலைஞர் கருணாநிதி**, தமிழக முதல்வர்.

தமிழிசைக்கும், இலக்கியத்திற்கும், தமிழகத்தின் தொழில் வளத்திற்கும் சிறப்பான சேவை புரிந்தவர் பெரியவர் எம்.ஏ. சிதம்பரம்

- **ஜெயலலிதா**, அ.தி.மு.க. பொதுச்செயலர்

செட்டிநாட்டு அரசர் குடும்பத்தை சேர்ந்த இளவல் எம்.ஏ. சிதம்பரம் மரணச்செய்தி கேட்டு மிகுந்த அதிர்ச்சியும், துயரமும் அடைந்தேன். தமிழகத்தின் தொழில் வளர்ச்சிக்காகத் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டவர். 1955-ல் சென்னை நகர மேயராக பதவி வகித்து சிறப்பாகச் செயல்பட்டவர். தமிழ்நாடு கிரிக்கெட் சங்கத்தின் வளர்ச்சியில் மிகுந்த ஈடுபாட்டோடு செயல்பட்டு, பிரம்மாண்ட கிரிக்கெட் விளையாட்டு அரங்கம் அமைவதற்குக் காரணமாக இருந்தவர்.

அதனால்தான் அவரது நினைவாக எம்.ஏ. சிதம்பரம் அரங்கம் என்று பெயர் சூட்டப்பட்டு பெருமையுடன் அழைக்கப்படுகிறது. அகில இந்திய அளவில் கிரிக்கெட் வாரியத்திலும் பொறுப்பு வகித்தவர். டென்னிஸ் விளையாட்டு வளர்ச்சியில் அகில இந்திய அளவில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர். பிலிப்பைன்ஸ் நாட்டின் கவுரவத் தூதராக இருந்து சிறப்பு சேர்த்தவர்.

- **மூப்பனார்**, த.மா.கா. தலைவர்.

தமிழகத்தின் தொழில்துறை, இசை, இலக்கியம், விளையாட்டு என அனைத்துத் துறை வளர்ச்சிக்கும் பாடுபட்டு வந்த பெருமகனார்.

- வைகோ, ம.தி.மு.க. பொதுச்செயலர்.

இந்தியாவில் தலை சிறந்த தொழிலதிபர்களில் ஒருவரும், சிறந்த கல்வியாளரும், இந்தியாவில் விளையாட்டுத்துறையின் வளர்ச்சிக்குக் குறிப்பாக, கிரிக்கெட் விளையாட்டின் வளர்ச்சிக்குத் தன்னை முழுவதுமாக ஈடுபடுத்திக் கொண்டவர், தமிழிசைப் பாதுகாவலர்.

- ஆர்.எம். வீரப்பன், எம்.ஜி.ஆர் கழகத் தலைவர்.

மறைந்த எம்.ஏ. சிதம்பரம் தமிழிசையின் மீது எவ்வளவு பற்று வைத்திருக்கிறார் என்பது சில ஆண்டுகளுக்கு முன் தமிழிசை பற்றி ஒருவர் தவறாகக் கூறியதைக் கண்டுச் சிங்கமென பொங்கி எழுந்து, கூறியவரை மறுத்துரைக்க வைத்தார்.

தொழில், கல்வி, விளையாட்டு, மருத்துவம் ஆகிய எல்லாத்துறைகளிலும் அவரது தொண்டும் பெரும் பங்கும் வரலாற்றில் நிலைத்து நிற்பதாகும். **- கி. வீரமணி,** தி.க. பொதுச்செயலர்.

நாட்டிய அரங்கேற்றம்...



காரைக்குடி அபிசீனியா நா. பழனியப்பன் - ஜானகி தம்பதியரின் பேத்தியும், பழ. ராமசாமி - உமையாள் தம்பதியரின் புதல்வி செல்வி நாச்சம்மை என்ற மீனாட்சியின் பரதநாட்டிய அரங்கேற்றம் மீனாட்சிதிருமைந்தன் வி.என்.சிதம்பரம் அவர்கள் தலைமையில் 8-2-2000 அன்று காரைக்குடி ஆர்.எம்.வி. கல்யாண மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. டாக்டர். அழகப்பசெட்டியார் கல்வி அறக்கட்டளை செயலாளர் டாக்டர். திருமதி உமையாள் இராமநாதன், அழகப்பா பல்கலைக்கழக துணைவேந்தர் டாக்டர் கே. ருக்குமணி, காரைக்குடி தமிழிசைச் சங்கத்தலைவர் பி.ஆர். சொக்கலிங்கம், செயலாளர் டாக்டர் கே. ராகவன், காரைக்குடி ரோட்டரி சங்கத்தலைவர் ஏ.ஆர். விஸ்வநாதன் ஆகியோர் பங்கேற்று வாழ்த்திப் பேசினர்.

நாட்டிய ஆசிரியை கலை சுடர்மணி மதுரை சாந்தினி அருணகிரி எம்.ஏ., தலைமையில் பல்வேறு கலைஞர்கள் ஆடலுக்கு துணை புரிந்திருந்தனர்.



நடுவரின் நான்கு குணங்கள்

பொறுமையாக வாதப் பிரதிவாதங்களைக் கேட்பது
புத்திசாலித்தனமாகப் பதில் கூறுவது
உணர்ச்சி வசப்படாமல் சிந்திப்பது
நடுநிலை தவறாமல் தீர்ப்பு கூறுவது - **சாக்ரடீஸ்**

வெற்றியின் இரகசியம்!

- - - - - தென்கச்சி கோ. சுவாமிநாதன் - - - - -

மனமும் நிறைவும்

ஒரு ஆள் இருந்தான். நிறைய பணம் சம்பாதித்தான். சேர்த்த பணத்தைச் செலவு செய்ய அவனுக்கு மனம் வரவில்லை எனவே அவ்வளவு பணத்தையும் ஒரு பெட்டியில் வைத்துப்பூட்டி அதை ஊருக்கு ஒதுக்குப்புறமாக இருந்த ஒரு புளியமரத்தடியில் புதைத்து வைத்தான்.

வாரத்துக்கு ஒருதடவை அவன் அந்த மரத்தடிக்கு வருவான். புதைத்த இடத்தை ஆவலோடு பார்த்துக்கொண்டு கொஞ்ச நேரம் உட்கார்ந்திருப்பான். அப்புறம் போய்விடுவான்.

அவ்வளவு தான்...

ஒருநாள் ஒரு திருடன் அந்தப்பக்கமாக வந்தான். இவன் ஏன் இப்படி உட்கார்ந்திருக்கிறான் என்று யோசித்தான். அவனுக்குச் சந்தேகமாக இருந்தது. அவன் போனபிறகு அந்த இடத்தைத் தோண்டிப் பார்த்தான். அவன் சந்தேகப்பட்டது சரிதான். அந்த இடத்தில் பெட்டி இருந்தது. திறந்து பார்த்தான். பணம் இருந்தது. எடுத்துக் கொண்டு போய்விட்டான்.

புதைத்து வைத்தவன் வந்தான். பார்த்தான். அவனுக்கு புரிந்துவிட்டது. புலம்ப ஆரம்பித்து விட்டான்.

அந்த வழியாக ஒரு பெரியவர் வந்தார்.

"ஏனப்பா புலம்புகிறாய்?" என்று கேட்டார்.

இவன் விவரத்தைச் சொன்னான்.

அவர் கேட்டார், "ஏம்ப்பா... வாராவாரம் இந்த இடத்தை வந்து பார்க்கிறதாகச் சொன்னாயே... எப்பவாவது இதிலே இருந்த பணத்தை எடுத்துச் செலவு செய்திருக்கிறாயா?"

"இல்லீங்க... நான் அப்பப்ப வந்து அதைப் பார்க்கிறதுதான் வழக்கம். அதைத் தொட்டதே இல்லை"

"அப்படின்னா இப்பவும் நீ அதேமாதிரி வாராவாரம் ஒருதடவை வந்து இந்த இடத்தைப் பார்த்துவிட்டுப் போகலாமே!"

அவன் யோசிக்க ஆரம்பித்தான்.

அவர் சொல்வதும் சரிதானே!

எவ்வளவு காலமானாலும் அவன் அந்தப் பணத்தை எடுத்து செலவு செய்யப் போவதில்லை. அப்படி இருக்கும்போது உள்ளே பணம் இருந்தாலும் ஒன்றுதான் இல்லாமல் போனாலும் ஒன்றுதான்.

இதிலேயிருந்து என்ன புரிகிறது?

ஒரு மனிதனிடம் இருக்கிற பணத்தைக் கொண்டு அவன் ஏழையா பணக்காரனா என்று முடிவு செய்வது சரி இல்லை.

அந்த செல்வத்தை அவன் அனுபவிக்கிற திறன், பயன்படுத்துகிற திறன்... இதை வைத்துத்தான் அவன் ஏழையா பணக்காரனா என்பதைத் தீர்மானிக்கவேண்டும். அதுதான் சரி.

செலவு செய்யத் தெரியாதவன் சேமித்துக் கொண்டே இருப்பதால் என்ன பயன்?

தலைமுடியே இல்லாதவன் தாராளமாக சீப்புகளை வாங்கிச் சேர்த்துக் கொண்டிருப்பது மாதிரிதானே இது?

சிலசமயங்களில் செலவு செய்ய நாம் தயாராக இருந்தால்கூட சேர்த்து வைத்திருக்கிற செல்வம் நமக்குப் பயன்படுவதில்லை.

அது எப்படி என்கிறீர்களா...?

இதை கேளுங்கள்.

அரேபியாவில் ஒரு நகை வியாபாரி...

விலை உயர்ந்த முத்துக்களையெல்லாம் அவர் வைத்துக் கொண்டிருந்தார்.

அவர் ஒருசமயம் ஓர் ஒட்டகத்தின் மீது ஏறி ஒரு பாலைவனம் வழியாகப் போய்க் கொண்டிருந்தார்.

அப்போது திடீர் என்று ஓர் இடத்தில் கடுமையான காற்று வீச ஆரம்பித்து விட்டது.

பாலைவனப்புயல்...

திசை தவறி இவர் எங்கேயோ வந்துவிட்டார்.

உடன் வந்தவர்களையும் காணவில்லை. அவர்களும் திசை மாறிப் போய்விட்டார்கள். இவர் ரொம்பவும் பயந்து போனார். அங்கேயும் இங்கேயும் அலைந்து திரிந்தார். வழி தெரியவில்லை.

வயிறு பசிக்க ஆரம்பித்தது. வரவர பசி அதிகரித்தது. கொஞ்சநேரத்தில் கடுமையான பசி அவரை வாட்டி எடுத்தது.

ஒட்டகத்தின் முதுகில் ஒரு மூட்டை இருந்தது. உள்ளே ஏதாவது இருக்குமா என்று அதைப் பிரித்துப் பார்த்தார்.

அதுவரையிலும் கண்ணில் தட்டுப்படாத ஓர் அபூர்வமான பை கண்ணில்பட்டது.

ஆகா! அதில் ஏதாவது இருக்கும். சாப்பிட உதவும் என்று எண்ணி ஆவலோடு அதைப் பிரித்தார்.

உள்ளே...

விலை உயர்ந்த முத்துக்கள்!

இப்போது அவர் நினைக்கிறார் "விலை உயர்ந்த முத்துக்கள்கூட சாப்பிடுவதற்கு உணவாக முடியாது" என்பது அவருக்குப் புரிந்தது.

எந்தநேரத்திரல் எது நமக்குத் தேவையோ அது நமக்குத் தாராளமாகக் கிடைக்க வேண்டும்.



அப்படி அது கிடைப்பதற்கு நம்மிடம் உள்ள செல்வம் பயன்படவேண்டும்.

அது நமக்குப் பயன்படலாம். நம் மூலமாக மற்றவர்களுக்கும் பயன்படலாம்.

அதுதான் செல்வத்தின் பயன்.

ஒரு மரத்தடியில் ஒருவன் உட்கார்ந்து அழுது கொண்டிருந்தான்.

அந்தப்பக்கமாக நடந்துவந்த இன்னொருவன் இவனைப் பார்த்துக் கேட்டான்.

"ஏம்பா அழுதுகிட்டிருக்கே?"

"இந்த இடத்துலேதான் பூமிக்கு அடியிலே பணம் இருக்கு. புதைச்ச இடம் தெரியலே. அதுதான் அழறேன்"

"நல்லா ஞாபகப்படுத்திப்பாரு. எந்த இடத்துலே புதைச்சே?"

"அது எப்படி எனக்குத் தெரியும்? புதைச்சு வச்சது நான் இல்லே... எங்க எதிர்த்த வீட்டுக்காரன்..."

- சொல்வேன்

8 நகரத்தார் வாழ்வும் வாக்கும்

– சொ.சொ.மீ. சுந்தரம் –

தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒரு பெரியவர், காசி மாநகரில், கங்கைக்கரையில் உட்கார்ந்து, கையளவு தாளில் 'மாண்புமிகு' என்று எழுதி ஒவ்வொரு தாளாகக் கங்கையில் விட்டெறிந்து கொண்டிருந்தார். எனக்கு ஒரே ஆச்சரியம்! அவரிடம் சென்று "என்ன செய்கிறீர்கள்?" என்று கேட்டேன். "இந்த நாட்டில் தகுதியில்லாதவர்கள், மோசடிப் பேர்வழிகள், ஒழுங்கற்றவர்கள் ஆகிய பலருக்கும், அவர்கள் பெயருக்கு முன்னாள் 'மாண்புமிகு' என்று எழுதி எழுதி அந்த உயர்ந்த வார்த்தை மிகவும் அழுக்காகி விட்டது. கங்கையில் போட்டாவது அந்த அழுக்குப் போகுமா என்று பார்க்கிறேன்" என்றார் அந்தப் பெரியவர். நான் அவரிடம் கூறினேன், "தயவுசெய்து இப்படிச் செய்யாதீர்கள். கங்கையும் அழுக்காகிவிடும்" என்று. பாடுபட்டுப் பெற்ற சுதந்திரத்தின் அருமை தெரியாமல், நாட்டுப்பற்றும், மொழிப்பற்றும், தெய்வப்பற்றும் இல்லாத சந்தர்ப்பவாதிகளாக நம்முடைய அரசியல் தலைவர்களில் பெரும்பாலானவர்கள் இருக்கக்கூடிய இந்தக் காலத்தில், நமக்கு வழிகாட்டும் தலைவராக, தன்னலமற்ற தொண்டராக, தன் சொத்துக்களைத் தேசவிடுதலைப் போரில் இழந்த தியாகியாக, ஒருவர் வாழ்ந்து நகரத்தார் இனம் என்ற பொற்குடத்துக்குப் பொட்டு வைத்தார். அவர்தான் காரைக்குடி தன்னைக் கம்பன் குடியாக்கிப் பேரைக் கொடுத்த பெரியவர் கம்பனடிப்பொடி சா. கணேசன் அவர்கள்.

ஆண்டுதோறும் தைப்பொங்கல்நாளில் தமிழறிஞர்கள் வீடுகளுக்கெல்லாம் ஒரு பொங்கல் வாழ்த்து வரும். அந்தக் கடிதத்தில் ***பால் பொங்கிற்றா? – கம்பனடிப்பொடி*** என்று எழுதப்பட்டிருக்கும். அதைப் பார்த்ததும் கணேசனார் நினைவு வரும். கள்ளமற்றுக் கலகலத்த பேச்சுக் கேட்கும் கருப்பான சிரித்தமுகம் கருணை காட்டும்.

வாக்கும் வாழ்வும் ஒன்றாகவே இருக்க வேண்டும் என்பதில் மிகவும் கண்டிப்பானவர் கணேசனார். அவரிடம் கோபமும் அதிகம் குணமும் அதிகம். தேவகோட்டையில் கந்தர் சஷ்டி விழா. அவர் தலைவர். நான் பேசினேன். அப்பொழுது "திருநாரையூரில் உள்ள பொல்லாப் பிள்ளையார் தேவாரம் இருக்கும் இடத்தை அறிவித்தவர் காரைக்குடியில் வாழும் இந்தப் பொல்லாப்பிள்ளையார் கம்பனை நமக்கு அறிமுகம் செய்தவர்" என்று குறிப்பிட்டேன். (திருநாரையூர்ப் பிள்ளையாருக்குப் பொல்லாப்பிள்ளையார் என்று பெயர். நம்பியாண்டார் நம்பி என்ற சிவாச்சாரியாருக்குச் சிதம்பரத்தில் தேவார ஏடுகள் இருப்பதை அறிவித்தவர் அவர்.) தலைவர் கணேசனார் தன் உரையில், "நான் பொல்லாப்பிள்ளையாரோ நல்ல பிள்ளையாரோ எனக்குத் தெரியாது. ஆனால் நாரையூர்ப்பிள்ளையார் பொல்லாப் பிள்ளையார் இல்லை. இவர் பொள்ளாப் பிள்ளையார்." 'பொள்ளாத' என்றால் உளிகொண்டு செதுக்கப்படாத' என்று பொருள். தானே முளைத்த பிள்ளையார் அவர். காலப்போக்கில் இது பொல்லாப் பிள்ளையார் என்று மாறிவிட்டது. திருவாசகத்தில் மாணிக்கவாசகர் இறைவனை "என் பொல்லாமணியே" என்று அழைப்பார் அதுவும் இதே பொருளை உடையது என்று விளக்கம் கூறினார்.

சர்க்கரைப் பொம்மையை எந்தப் பக்கம் கடித்தாலும் இனிக்கும். சா. கணேசனாரிடம் எதைப்பற்றிக் கேட்டாலும் தக்கவிடை கிடைக்கும். காரைக்குடியில் கம்பன் திருநாள் கண்ட சா. கணேசனார் 2-4-1939 முதல் விட்டு விடாமல் தொடர்ந்து நடத்திய புகழ் பெற்றவர்.

ஆண்டின் இறுதிமதி அத்தத் திருநாளில்

வடஇந்திய சுற்றுலா & காசி யாத்திரை

ரயில்வே கோச்சில் ஆகார வசதியுடன் புறப்படுகிறது
18–4–2000 முதல் **18** நாட்கள்:
மதுரை - சென்னை - மும்பை - அஜ்மீர் - புஷ்கர் - ஜெய்ப்பூர் - ஆக்ரா - மதுரா - சிக்கந்ரா - பிருந்தாவன் - டெல்லி - ஹரித்துவார் - ரிஷிகேஷ் - காசி - கயா - புத்தகயா -சாரநாத் - அலகாபாத் (திரிவேணி) நபர் 1க்கு ரூ. 5,400-00

மும்பை - கல்கத்தா 18–4–2000 முதல் **12** நாட்கள்:
சென்னை - கல்கத்தா - பூரி - புவனேஸ்வர் - கொனார்க் - மும்பை - சோலாப்பூர் - பண்டரிபுரம் - மந்திராலயம் - சென்னை நபர் 1க்கு ரூ. 3,750-00

காசியாத்திரை 1–5–2000 மற்றும் **16–2–2000** முதல் **15** நாட்கள்:
டெல்லி - ஆக்ரா - சிக்கந்ரா - மதுரா - பிருந்தாவன் - ஹரித்துவார் - ரிஷிகேஷ் - காசி - சாரணாத் - கயா - புத்தகயா - அலகாபாத் (திரிவேணி) நபர் 1க்கு ரூ. 4,700-00

பத்ரி - கேதார் - காசியாத்திரை 1–5–2000 முதல் **21** நாட்கள்:
டெல்லி - ஆக்ரா - சிக்கந்ரா - மதுரா - பிருந்தாவன் - ஹரித்துவார் - ரிஷிகேஷ் - தேவபிரயாக் - ருத்ரபிரயாக் - கௌரிகுண்டு - கேதார்நாத் - ஜோசிமத் - பத்ரிநாத் - காசி - சாரணாத் - கயா - புத்தகயா - அலகாபாத் (திரிவேணி) நபர் 1க்கு ரூ. 6,300-00 இதில் நேப்பாள், கல்கத்தா, மும்பை சேர்த்து 29 நாட்கள் நபர் 1க்கு ரூ. 9,100-00

சிம்லா ஸ்பெஷல் 16–5–2000 முதல் **11** நாட்கள்:
டெல்லி - ஆக்ரா - சிக்கந்ரா - மதுரா - பிருந்தாவன் - குருச்சேத்திரா - சண்டிகார் - பின்ஜோர் - சிம்லா - குப்ரி - டெல்லி நபர் 1க்கு ரூ. 3,490-00. இதில் குளூ மணாலி ரோத்தாங்பாஸ்,வசிஷ்டாபாத் சேர்த்து 14 நாட்கள் நபர் 1க்கு ரூ. 4,700-00

மும்பை - கோவா 18–5–2000 முதல் **10** நாட்கள்:
மதுரை - மும்பை - கோவா - பெங்களூர் - நபர் 1க்கு ரூ. 3,500-00

கட்டணங்கள் யாவற்றிலும் ஸ்லீப்பர் கிளாஸ் ரயில் கட்டணம், மூன்றுவேளை ஆகாரம், காலை-மாலை காபி, ஊர் சுற்றிப் பார்க்கும் பஸ் கட்டணம் ஆகியவை அடங்கும். LTC LFC சர்டிபிகேட் வசதியுண்டு முழு விபரங்களுக்கு:



ஸ்ரீ முருகன் டிராவல் ஏஜன்ஸி

9 வடக்கு ஆவணி மூல வீதி, மதுரை - 625 001.
போன்: 629365, 624168, 650784 பேக்ஸ்: 0452-629365

(பங்குனி மாதம் அஸ்த நட்சத்திரம்) கம்பன் இராமாயணத்தை அரங்கேற்றினான் என்று ஆராய்ந்து கண்டு, பங்குனி மாதம் மகம், பூரம், உத்தரம் ஆகிய மூன்று நாட்களிலும் காரைக்குடியில் விழா நடத்தி, அந்த மூன்று நாட்களிலும் உண்ணாநோன்பாக விரதம் இருந்து, நான்காவது நாள் அஸ்த நட்சத்திரத்தில் கம்பன் சமாதி கொண்ட நாட்டரசன்கோட்டையில் விழா நடத்தி, அன்று கம்பனுக்கு அர்ச்சனை செய்து அதன் பின்னரே உணவருந்தும் பழக்கமுள்ளவர் கணேசனார். காலையிலும் மாலையிலும் விழா நடக்கும். பகல்வேளையில் அவரோடு பேசினால் பல செய்திகளைத் தெரிந்து கொள்ளலாம் "திருப்பதிப்பெருமான் திருவுருவம் முருகன் திருவுருவம்" என்று ஒருநாள் ஆய்வுரை செய்தார் "நகரத்தார்களில் புரட்டாசி மாதம் புலால் உண்ணாதவர்கள் வைணவர்கள். கார்த்திகை மாதம் புலால் உண்ணாதவர்கள் சைவர்கள்" என்று மற்றொரு நாள் குறிப்பிட்டார் கல்வெட்டுச் செய்திகள், தமிழ் எழுத்துக்களின் வளர்ச்சி, கம்பனின் பலதுறை அறிவு, பிள்ளையார்பட்டிப் பெருமை என்று பல செய்திகளை அவர் கூறக் கேட்டால் இவர் ஒரு நடமாடும் பல்கலைக்கழகம் என்று எண்ணத்தோன்றும்.

அவர் ஒரு கவிஞர். குறள் வெண்பா அவருக்குக் கைவந்த கலையாகும். பேசுவது போல வெண்பா எழுதுவார். காரைக்குடியில் கம்பன் திருநாள் கவியரங்கில் பங்கு பெறும் கவிஞர் பெருமக்கள் தங்கள் கவிதைப் படியை முன்னரே அவருக்கு அனுப்பி வைக்கவேண்டும். கவிதை அனுப்பத் தாமதமானால் உடனே ஒரு கடிதம் வரும்.

கம்பன் திருநாட் கவியரங்கம் ஏறுவதற்(கு)
அன்போ டிசைந்த அருளாளர் - மன்புவியில்
நின்று பயன்சுரக்கும் நின்கவிதை முற்படிய
என்று தரவிடுப்பீர் இங்கு.

என்ற வெண்பாவைப் பார்த்ததும் கவிதை வேகமாக வரும். கம்பன் கவியரங்கில் பங்கேற்பவர்களை அருளாளர் என்று குறிப்பிடுவாரேயானால் அந்தக்கம்பன் மீது அவருக்கு எவ்வளவு பக்தி இருக்கும்! கம்பன் திருநாள் காலந்தவறாமையையும் கற்றுக் கொடுத்தது. சட்டையைச் சட்டை செய்யாத சா. கணேசனார் காலையில் கம்பன்விழா மேடையில் ஏறி, "கம்பன் வாழ்க! கம்பன் புகழ் வாழ்க! கன்னித்தமிழ் வாழ்க!" என்று கூறும்பொழுது அவைப் பெருமக்கள் தங்கள் கடிகாரங்களை மிகச்சரியாக 9-30 மணிக்கு திருப்பி வைத்துக் கொள்வார்கள். "நான் தருவது சம்மதம் வருவது தாமதம் எனக்கு எம்மதமும் சம்மதம்" என்று கூறி இயல்பாகவே விழாக்களுக்குத் தாமதமாக வரும் கவியரசர் கண்ணதாசன் அவர்கள் காரைக்குடியில் கம்பன் திருநாள் மேடையில் சரியான நேரத்தில் காட்சி கொடுப்பார்.

இராமகிருஷ்ண இயக்கத்துக்குச் சுவாமி விவேகானந்தர் காரணம். கம்பன் இயக்கத்துக்குக் கணேசனார் காரணம். கவியரங்கம், பட்டிமண்டபம், மேல் முறையீட்டுப் பட்டிமன்றம், நற்றமிழ் முற்றம், இவர்கள் சந்தித்தால் என்று புதிய நிகழ்ச்சிகளை இலக்கியத்தரம் குன்றாமல் அமைத்தவர் கணேசனார் இன்று பட்டிமண்டபங்கள் தரம் கெட்டுப் போய் விட்டன. அவர் மீண்டும் வந்தாலன்றி இதைத் திருத்த முடியாதோ என்று எண்ணத் தோன்றுகிறது. "எப்படி வாழவேண்டும் என்று காட்டுவதால் இலக்கியம் சிறப்பானது. தரம் குன்றாத இலக்கியங்கள் தான் தரமுயர்ந்த மனிதனை உருவாக்கும்" என்று பேசிய கணேசனார் கடைசிவரை அதற்காகவே உழைத்தார். இந்தியாவிலும், மலேசியாவிலும், இலங்கையிலும் சுமார் 47 கம்பன் கழகங்கள் அவர் தூண்டுதலால் உருப்பெற்றவை. அந்தக் கழகங்களைத் தொடங்கும்போது, தாய் மகளுக்குச் சீர்வரிசை கொடுப்பதுபோல கம்பராமாயணப்புத்தகம், கம்பன் திருவுருவப்படம் எலலாம் கொடுப்பார்.

அவரோடு பல ஊர்களுக்குச் செல்லும் வாய்ப்பு இறைவன் கருணையால் எனக்கும் வாய்த்தது. பிள்ளையார்பட்டிக்குப் போனபொழுது "இந்தப் பிள்ளையாருக்கு என்ன பெயர்?" என்று கேட்டார். நான்

"கற்பகவிநாயகர்" என்று கூறினேன். "இல்லை. இவர் பெயர் தேசிவிநாயகப்பிள்ளையார். கல்வெட்டில் இப்பெயர் உள்ளது. நானாதேசங்களுக்கும் சென்று வணிகம் செய்த நானாதேசிகளான நகரத்தார்களால் வழிபடப் பெற்றதால் இவர் தேசிவிநாயகர்" என்றார். கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை பெயர் எனக்கு நினைவில் வந்தது.

பழனிக்குப் போனபொழுது மலைமேல் உள்ள தண்ணீர்ப் பந்தலைக் காட்டி, "நான் பிறப்பதற்காக என் தந்தையார் சாமிநாதன் செட்டியார் வைத்த தண்ணீர்ப்பந்தல்" என்று குறிப்பிட்டார். என் மீது பேரன்பு கொண்டு. நல்லவைகளைப் பாராட்டி, குறைகளை நயமாகக் கூறித் திருத்தியவர். நான் பிள்ளையார்பட்டிப் பிள்ளையார் மீது திருப்பள்ளி எழுச்சி பாடியபொழுது மிகப் பாராட்டி "இவருக்கு இதுவரை இல்லாத ஒரு புதுநூலை நல்லமுறையில் செய்திருக்கிறாய்" என்று குறிப்பிட்டார். கம்பன் கவியரங்கில் ஒருமுறை நான் தலைப்பைக் கொஞ்சமாகப் பாடிவிட்டு, பிற செய்திகளைக் கூறிச் சபையின் ஆரவாரமான கைதட்டல்களைப் பெற்றேன். அப்பொழுது என்னை அழைத்த கணேசனார், "உன் கவிதை வாழைக்காய்ப் பஜ்ஜி போல இருந்தது. அந்தப் பஜ்ஜியில் வாழைக்காய் குறைவாக இருக்கும். மாவு அதிகமாக இருக்கும். இனிமேல் கைதட்டலுக்காகப் பொருளை விட்டுப் போகக்கூடாது" என்று கூறினார். இன்றுவரை இந்த அறிவுரையை நான் மறக்கவில்லை.

கம்பன் மீது பெருங்காதல் கொண்ட கணேசனார் அவன் பெயராகவே தன் பெயரை மாற்றிக்கொண்டார். தொண்டரடிப் பொடி என்று ஓர் ஆழ்வார் பெயர் அமைந்தது போல, இவருக்கும் கம்பனடிப்பொடி என்ற பெயர் அமைந்தது. பணியுமாம் என்றும் பெருமை என்ற குறளுக்கிணங்கத் தன்னைக் கம்பனுடைய கால்தூசாக எண்ணிய பெரியவர் கணேசனார் திருவாரூர்ப்பெருமான் மீது காதல் கொண்ட அப்பரடிகள் முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள் என்று ஒரு தேவாரம் பாடினார். அந்தப் பாடலைக் போலவே கம்பன் காதலர் கணேசனார் மறைந்தபொழுது நான் ஒரு பாடல் பாடமுயன்றேன்.

முன்னம் அருட் கம்பனெனும் நாமம் கேட்டான்
மூர்த்தியவன் ராமகதை முழுதும் கேட்டான்
பின்னருள்ள சான்றோர்கள் பேசக் கேட்டான்
பேர்த்துமவன் சேவடிக்கே பிச்சன் ஆனான்
அன்னையுடன் அத்தனுமே கம்பன் என்றான்
அவன்பெயராய்த் தன்பெயரை மாற்றிக்கொண்டான்
தன்னைமறந் திட்டான் தன் நாமம் கெட்டான்
தலைப்பட்டான் கம்பனெனும் தலைவன் தானே

இந்தப் பாடலைப் படித்த பலர் கண்ணீர் விட்டனர். என் கவலை இதைக்கேட்க அவர் இல்லையே என்பதுதான்.

கேரள அமைச்சர் ராஜினாமா...!

கேரள மாநில போக்குவரத்துத்துறை அமைச்சர் நீலலோகிததாசன் தன் பதவியை ராஜினாமா செய்தார். துறைச்செயலாளர் ஐ.ஏ.எஸ். அதிகாரி நளினி என்ற பெண்மணியை பாலியல் பலாத்காரம் செய்ய முயன்றார் என அந்தப் பெண் அதிகாரி தொடர்ந்த வழக்கில் அவர் இந்த முடிவை எடுத்தார். இதனால் கேரள மாநில சட்டசபையில் பெண் எம்.எல்.ஏ.க்கள் வெளிநடப்பு செய்து தங்களின் எதிர்ப்பை தெரிவித்தனர்.

★ ★ ★

தில்லைக்கூத்தனை கேளுங்கள்
அடுத்த இதழில்...

★ ★ ★



இல்ல மங்கல விழாக்கள்



அ.தி.மு.க. முன்னாள் அமைப்புச் செயலாளரும், தமிழக முன்னாள் அமைச்சருமான எஸ். ரகுபதி பி.எஸ்.ஸி., பி.எல்., அவர்களின் புதல்வன் டாக்டர் ஆர். அண்ணாமலை எம்.எஸ்.,(ஆர்தோ)க்கும், பூலாங்குறிச்சி வ.செ.சிவ. வள்ளியப்பசெட்டியார் அவர்களின் புதல்வி வி. மீனாட்சி எம்.எஸ்.ஸி.,க்கும் 9-2-2000 அன்று மணமகள் இல்லத்தில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. உறவினர்களும், நண்பர்களும் பெருமளவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

நாட்டரசன்கோட்டை கண. உலகப்பன் அவர்களின் புதல்வி விசாலாட்சிக்கும், தேவகோட்டை அழ.அரு. சுப்பையா செட்டியார் பேரனும், நாராயணன் அவர்களின் புதல்வனுமான வெள்ளையனுக்கும் 10-2-2000 அன்று மணமகள் இல்லத்தில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

பொன். புதுப்பட்டி எஸ்பி. முத்துராமன் செட்டியார் பேத்தியும், வயிரவன் செட்டியார் புதல்வியுமான சௌந்தரம் (எம்.ஏ.) கொல்லங்குடி அளகாபுரி ஓ.எஸ்.டி.சி.சின்னையா செட்டியார் அவர்களின் புதல்வன் மெய்யப்பன் பி.ஈ., இவர்களின் திருமணம் 7-2-2000 அன்று மணமகள் இல்லத்தில் சிறப்பாக நடைபெற்றது.

காரைக்குடி திருமகள் அச்சகம் அபிசீனியா நா. பழனியப்பன் - பழ. ஜானகி தம்பதியரின் புதல்வன் நாராயணன் என்ற வாசுதேவன் பி.ஈ., (மெக்), டி.பி.எம்., டி.எஃப்.எஸ்., ஏ.எம்.ஐ.ஈ., எம்.ஐ.எஸ்.டி.ஈ., (குவாலிட்டி சிஸ்டம் என்ஜினியர், ஸ்டேம் ஃபோர்ட் பிரிசிஷன் பிரைவேட் லிட்., சிங்கப்பூர்)க்கும், கொ. அழகாபுரி உ.தெ.மெ.உ.மெ. மெய்யப்பசெட்டியார் அவர்களின் புதல்வி விசாலாட்சி பி.காம்., சி.ஏ., க்கும் 9-2-2000 அன்று மணமகள் இல்லத்தில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

காரைக்குடி முத்துப்பட்டினம் கண. பஞ்சுஅருணாசலம், மீனா பஞ்சுஅருணாசலம் தம்பதியரின் புதல்வன் சண்முகநாதன் என்ற சண்முகம்பஞ்சு பி.ஈ., எம்.எஸ்.(யு.எஸ்.ஏ)க்கும், கோனாபட்டு பி.மு.ராம.ச. இராமசாமி செட்டியார் அவர்களின் புதல்வி முத்தாயி என்ற லதா, பி.பி.டி.சி.ஏ.ஒய்.டி. க்கும் 10-2-2000 அன்று மணமகள் இல்லத்தில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

காரைக்குடி அ.மு.க.மு.க.கரு. முத்துக்கருப்பன் செட்டியார் பேரனும், கருப்பன்செட்டி புதல்வனுமான டாக்டர். பழனியப்பனுக்கும், கல்லல் நா.வயி.நா.நா. சாமிநாதன் செட்டியார் பேத்தியும், பழனியப்பசெட்டியார் புதல்வியுமான நாச்சம்மை என்ற வித்யாவிற்கும் திருமணம் மணமகள் இல்லத்தில் 9-2-2000 அன்று சிறப்பாக நடைபெற்றது.

எக்ஸ்போ பிரிண்டர்ஸ், 20, கிருஷ்ணாபுரம் 4வது குறுக்குத் தெரு, மதுரை - 9 ல் அச்சிட்டு நடராஜ அண்ணாமலை அவர்களால் 108-109, நேதாஜிரோடு, மதுரை - 1 லிருந்து வெளியிடப்பெறுகிறது. - ஆசிரியர் வி.என். சிதம்பரம்

சங்கத்துச் செய்திகள்



கேரள மாநிலம் கொச்சியில் நகரத்தார் சங்கம் தொடங்கப்பெற்றது. பாரத் டூரிஸ்ட் ஹோம் அரங்கில் நீதியரசர் அரு. லெட்சுமணன் அவர்கள் குத்துவிளக்கேற்றி துவங்கி வைத்தார். அண்ணாமலை பல்கலைக்கழகத்தின் சார்பில் டாக்டர் பட்டம் வழங்கப்பட்ட நீதியரசர் அவர்களுக்கு பாராட்டுவிழாவும் நடைபெற்றது.

விழாவில் படஅதிபர் பழ. கருப்பையா, பதிப்புச்செம்மல் ச. மெய்யப்பன், சொ.சொ.மீ. சுந்தரம், இராம. சௌந்தரவள்ளி ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்திப் பேசினர். சங்கத்தலைவர் பழநியப்பன் வரவேற்றுப் பேசினார். விழா ஏற்பாடுகளை செயலாளர் அ.சொ. சிவப்பிரகாசம், பொருளாளர் வைரவன், எவர்ஷைன் மணி காசிநாத் ஆகியோர் சிறப்பாகச் செய்திருந்தனர். திருப்பதி நன்றி கூறினார்.

ஈரோடு

நாட்டுக்கோட்டை நகரத்தார் சங்கத்தில் கூட்டு இறைவழிபாடும், சிறப்புச் சொற்பொழிவும் சிறப்பாக நடைபெற்றது. லேனா தமிழ்வாணன் 'மாற்றங்களை வரவேற்போம்' எனும் தலைப்பில் உரையாற்றினார். திருவிளக்கு பூஜையில் சுமார் 100க்கும் மேற்பட்ட நம்மினப் பெண்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். விழா ஏற்பாடுகளை தலைவர் மா.பழ. மாயாண்டி செட்டியார், செல்வநாதன் ஆகியோர் சிறப்பாகச் செய்திருந்தனர்.

திருவனந்தபுரம்

நகரத்தார் சங்கப் பொதுக்குழுக்கூட்டம் நடைபெற்றது. வரும் ஆண்டில் திருமண உதவிநிதியாக ரூ. 1000-00 வீதம் பத்து திருமணங்களுக்கு வழங்கப்படும் என்று தீர்மானிக்கப்பெற்றுள்ளது. இத்தகவலை செயலாளர் ச. சுப்பிரமணியன் தெரிவித்திருக்கிறார்.

ஸ்ரீ ராமகிருஷ்ண ஜெயந்தி

தேவகோட்டை ஸ்ரீராமகிருஷ்ண வித்யாலயம் சார்பில் பகவான் ஸ்ரீ இராம கிருஷ்ண பரமஹம்ஸ தேவரது 165ஆவது ஜெயந்தி தினம் 17-2-2000 அன்று கொண்டாடப்பெற்றது. விழாவிற்கு மதுரை ஸ்ரீராமகிருஷ்ணமடத்தைச் சார்ந்த சுவாமி யதாத்மானந்தர் தலைமையேற்றார். மங்கள இசை வேதபாராயணம், பஜனை, ஆராதனை சிறப்புகள் நடைபெற்றது. அழகப்பா பல்கலைக் கழக பேராசிரியர் எஸ். ரகுநாதன் 'ஸ்ரீ ராமகிருஷ்ணரின் அமுதமொழிகள்' எனும் தலைப்பில் சொற்பொழிவாற்றினார். வித்யாலய மாணவர்கள் கலைநிகழ்ச்சிகளை நடத்தினர்.

பொள்ளாச்சி

நகரத்தார் இளைஞர் சங்கத்தின் சார்பில் 25-1-2000 அன்று சுப்பிரமணியசுவாமி ஆலயத்திலிருந்து செஞ்சேரிமலை அருள்மிகு மந்திரகிரி வேலாயுதசுவாமி கோயிலுக்கு இரண்டாம் ஆண்டாக நகரத்தார் பெருமக்கள் பாதயாத்திரை சென்று அபிஷேகம், ஆராதனைகள் செய்து வழிபட்டனர்.

மாத்தூர்

நகரத்தார் சங்கத்தின் சார்பில் நகரக் கோயிலில் திருவிளக்கு பூஜை 6-2-2000 அன்று சிறப்பாக நடைபெற்றது. நகரத்தார் பெருமக்களும் நம்மினப்பெண்களும் திரண்டு வந்து திருவிளக்குபூஜையில் கலந்து கொண்டு சிறப்பித்தனர். செயலாளர் சொ.ராம. அருணாசலம், சி.பழ.லெ. சிதம்பரம், அரு. வள்ளியப்பன் ஆகியோர் ஏற்பாடுகளைச் சிறப்பாகச் செய்திருந்தனர்.

நினைவாலயம்

தமிழ் மாமனிவர் அருள்நெறித்தந்தை தவத்திரு. குன்றக்குடி அடிகளார் அவர்களின் நினைவாலயம் குன்றக்குடியில் நிறுவப்பட்டுள்ளது. இந்த ஆலய குடமுழுக்குவிழா சிறப்பாக நடைபெற்றது. விழாவினை பொன்னம்பல தேசிகர், முன்னாள் அமைச்சர் ராம.வீரப்பன் மற்றும் பிரமுகர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

கோவிலூர் வேதாந்த மடாலயம்

கோவிலூர் வேதாந்த மரபு ஆய்வியலரங்கம் 13-2-2000 அன்று சிறப்புடன் நிகழ்ந்தது. தவத்திரு. நாச்சியப்ப ஞானதேசிகசுவாமிகள் முன்னிலையில் பூஜ்யஸ்ரீ தயானந்த சரஸ்வதி சுவாமிகள் அவர்கள் தலைமையில் வேதாந்த வித்தகர்களும், சாதுக்களும் கருத்துரை நிகழ்த்தினர். சென்னைக் கிளை மடத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பெரும்பாலோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



பகைமை அன்பினால் வெல்லுங்கள்
சோம்பலை ஆக்கத்தினால் வெல்லுங்கள்

கவிதையில் கசிந்தேன்...

- வி.என். சிதம்பரம் -

ஓர் அரசியல்கட்சித்தலைவருக்கு எதிராக நீதிமன்றத்தீர்ப்பு என்றாலும், அவர் கைது செய்யப்பட்டார் என்றாலும், ஒரு தலைவர் மரணமடைந்து விட்டார் என்றாலும் நாடெங்கும் வன்முறையாளர்களின் வெறிச் செயலும், சமூக விரோதக் கும்பல் தெருவில் உள்ள வணிக நிறுவனங்கள் கொள்ளை அடிப்பதும் வழியில் போவோர், வருவோரிடம் வழிப்பறி செய்வதும் ஒரு வாடிக்கையாக நடந்து வருகிறது. ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் அசம்பாவிதங்கள் நடந்து வருகின்றதைப் பார்க்கின்றபோது எனக்கு ஒரு சம்பவமும் நினைவுக்கு வருகிறது.

இரண்டாவது உலகமகா யுத்தத்தில் ஜப்பான்காரர்களுக்கும், ஆங்கிலேயர்களுக்கும் கடும் போர் நடந்து கொண்டிருந்தது. சிங்கப்பூர், மலேசியா மீது எல்லாம் குண்டுவீச்சு நடக்கும். சிங்கப்பூர், மலேசியா நாட்டின் ஆட்சிப்பொறுப்பு ஆங்கிலேயர் வசமிருந்தது.

குண்டு வீசப்பட்ட தெருக்களில் உள்ள கடைகளில் எல்லாம் வன்முறை கும்பலும், கொள்கைக்கும்பலும் (உள்ளூர்காரர்கள்தான்) புகுந்து பொருட்களை அள்ளிக் கொண்டு சென்று விடுவார்கள். யார் அள்ளிச் சென்றார்கள் என்று கேட்டால் ஜப்பான்காரர்கள் அள்ளிக்கொண்டு போனார்கள் என்று உள்ளூர்காரன் கொள்ளையடித்துவிட்டு ஜப்பான்காரன் மீது பழிபோடுவதை ஒன்றுமறியாத அப்பாவி வணிகர்கள் ஏமாந்து நிற்பார்கள். அந்த நாட்டில் நானிருந்தபோது நேரில் இதைக் கண்டேன்.

அதைப்போலவே நம் நாட்டில் நமது தமிழக முதல்வராயிருந்த மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்கள் இறந்தபோது அன்றும் இந்த சமூக விரோதிகளின் வெறியாட்டத்தையும், கொள்ளையடிக்கும் வித்தையையும் நேரில் கண்டு நொந்து போனேன். எம்.ஜி.ஆர். அவர்களின் மரணம் இயற்கையானது. வெளிநாட்டிலிருந்து தமிழகத்திற்கு வந்திருந்த ஒரு தமிழன் காரில் சென்று கொண்டிருந்தார். அவரின் தோளில் வெளிநாட்டுக் காமிரா வைத்திருந்தார். வன்முறைக்கும்பல் "டேய், காரை நிறுத்து. புரட்சித்தலைவர் இறந்து போனார். நீ என்ன காரில் போகிறாய்?" என்று கூறி காரை மறித்து அவரின் காமிராவைப் பிடுங்கிக் கொண்டு ஓடிவிட்டனர். அந்த வெளிநாட்டு ஆசாமி என்ன செய்தார் தெரியுமா...?

அருகில் உள்ள காவல் நிலையத்திற்குச் சென்று வன்முறைக்கும்பல் என் காமிராவையும், நான் கொண்டு வந்திருந்த ஐம்பதாயிரம் பெறுமான நகைகளையும் பிடுங்கிக்கொண்டு சென்று விட்டார்கள் என்று புகார் கொடுத்துவிட்டு F.I.R காப்பியை வாங்கிக் கொண்டு சென்றுவிட்டார். அந்த வன்முறைக்கும்பல் காமிராவை மட்டும்தான் பிடுங்கிச் சென்றது. காமிராவைப் பறிகொடுத்தவர் திரும்ப அவர் நாட்டிற்குச் செல்லும்போது அவர் கொண்டு வந்த நகைகளையும் கொண்டு செல்லவேண்டும் என்பது சுங்க இலாகாவின் விதி. ஆனால் அந்த வெளிநாட்டு நபர் தன்னுடைய நகைகளையெல்லாம் அதிகவிலைக்கு விற்றுவிட்டு அதையும் அந்த சமூக விரோதிகள் மீது பழியைப் போட்டு விட்டு, தப்பித்துக்கொண்டு எஃப்.ஐ.ஆர்.யை காட்டி அரசை ஏமாற்றிவிட்டார். ஒரு தவறு பல தவறுகளுக்கு வழி வகுக்கும் என்பதற்கு இது உதாரணம்... நஷ்டமெல்லாம் அரசுக்குத்தான். இவற்றைக் காட்டிலும் ஒரு கொடூரம் நிகழ்ந்ததென்றால்... தர்மபுரியில் கோவை வேளாண்மைக்கல்லூரி மாணவிகள் உயிருடன் எரித்துக் கொல்லப்பட்ட கொடுஞ் செயல்தான்... வன்முறை வெறியர்களும், சமூக விரோதிகளும் அரசியல் போர்வைக்குள் ஒளிந்து கொண்டு இப்படி செய்தனரா...? அல்லது அரசியல்வாதிகளின் தூண்டுதலினால் இப்படி நடந்ததா...? மாணவ சமுதாயமே ஒன்று திரண்டு இந்த கொடூர



செயலைக் கண்டித்து அங்கங்கு இரங்கலைத் தெரிவித்துவிட்டு அமைதியாக கனத்த நெஞ்சினராக உழன்று கொண்டிருக்கின்றனர். இப்படிப்பட்ட வன்முறையாளர்களை எந்த அரசியல் இயக்கமானாலும் கண்டித்து அடக்க வேண்டும். அப்படிப்பட்டவர்களைப் புறக்கணிக்கவேண்டும். உயிரோடு எரிக்கப்பட்ட அந்த மலர்கள் ஹேமலதா, காயத்திரி, கோகிலவாணியின் பெற்றோர் அழுவதாக **கவிஞர். மு.மேத்தா எழுதிய கவிதை** என் கண்ணில் பட்டது. படித்தேன். அந்தக் கவிதையில் என் கண்களில் கண்ணீருக்கு பதிலாக இரத்தம் கசிவதாக உணர்ந்தேன்.

அந்தக் கவிதை இதோ...

ஒரு தாயின் சாபம்...

நந்தவனம் கண்திறக்க
நடந்துவரும் செல்லமக
வந்துருவா என நெனச்சு
வாசலிலே நின்னுருந்தேன்!

மலர்ந்த முகப் பூவால
மணக்க வைக்கும் சின்னமக
வார திசை பாத்து
வழிமேலே காத்திருந்தேன்!

வண்டியில வந்திறங்கி
வண்ணமயில் நுழையுறப்போ
ஆரத்தி எடுக்கத்தான்
அரைச்சு வச்சேன் மஞ்சளெல்லாம்!

மணமா மணக்குற என்
மாமதுரை மல்லிகைய
பொணமா தூக்கிவந்து
போட்டுட்டாக வீட்டுக்குள்ள!

ஊழலுக்கு தண்டனையாம்...
ஊருக்குள்ள கலவரமாம்...
நாலெழுத்து படிக்கலியே
நமக்கு ஒண்ணும் புரியலியே!

வாயக்கட்டி வயித்தக்கட்டி
மனசுக்குள்ள கோட்டைகட்டி
கோயமுத்தூர் அனுப்பி
குலவிளக்க படிக்க வெச்சேன்!

கோயிலுக்குப் போறதுக்குக்
கூடையில பூப்பறிச்சேன்
பூப்பறிச்ச கூடையில
தீப்புடிச்ச நியாயமென்ன?

பெத்த வயிறெரிய
பேதலிச்சு மனமெரிய
சுத்தி நெருப்பெரிய
எம்புள்ள
கத்துனது கேக்கலையே!

ஊரறிய புள்ளபெத்து
ஊட்டி வளர்த்திருந்தா
கூட்டுக் கிளிகளுக்குக்
கொள்ளிவைக்க கைவருமா?

குப்பைகளத் தீ வச்சு
குளிர்காயும் ஊருக்குள்ள
கொழுந்துகள தீ வச்சு
குளிர் காய்ஞ்ச பாவி யாரு?

ஊனு உசுரு எல்லாம்
உமியா உதுருதடி
மானப் பறிகொடுத்து
மனசெல்லாம் பதறுதடி!

தண்டிக்க சட்டமுண்டு
சட்டத்துல ஓட்டையுண்டு!
அப்பீலும் வக்கீலும்
தப்ப வழி செஞ்சாலும்

பெத்த வயித்துக்குள்ள
பிடிச்ச நெருப்புஇது
சுத்தி வளைச்சுருமே...
சுடுகாடு சேத்துருமே!

911

நூல் அறிமுக விழா...



ஸ்ரீ. ராதாகிருஷ்ணன் ஐ.பி.எஸ்., அவர்கள் எழுதிய 'ஆண்டவர்பூமி' நூல் அறிமுகவிழா மதுரையில் நடந்தது. நமது ஆசிரியர் வி.என். சிதம்பரம் அவர்கள் தலைமையில் நடந்த இவ்விழாவில் டாக்டர் கு. ஞானசம்பந்தன், வாசுகணபதி (காவல்துறை துணை ஆணையர்), இரா. மோகன், மதுரைமணி சொ. டயஸ்காந்தி, அரசு ராஜாஜி மருத்துவமனை முதல்வர் ஜெ.ஆர். விஜயலெட்சுமி, என்.எஸ்.வி. சித்தன் ஆகியோர் பங்கேற்றுச் சிறப்பித்தனர். விழா ஏற்பாடுகளை இந்திய ஓவியக் கலைக்கூடம் சுப.கன. வேலாயுதம் சிறப்பாகச் செய்திருந்தார். விழாவில் புத்தகத்தை டாக்டர் என்.என். கண்ணப்பன் பெறுகிறார்...

நாகலிங்க கற்பகத்தரு...

தேவலோகத்தில் மட்டுமே இருக்கும் அனைத்தையும் வழங்கும் கற்பகமரம் போல இப்பூவுலகில் காணப்படும் அதிசயமரம் நாகலிங்க பூக்களைத் தருவிக்கும் நாகலிங்கமரம் ஆகும்.

சிவாலய கருவறையில் உள்ள சிவலிங்கத்திற்கு நாகாபரணம் சாற்றி அலங்காரித்திருப்பது போல, சிவலிங்கத்திற்கு குடை பிடித்திருப்பதுபோல தோற்றம் இயற்கையிலே அமையப் பெற்ற ஓர் அதிசய தெய்வமலர் நாகலிங்க மலராகும். மனித வாழ்க்கையில் ஒரு சுயம்பு லிங்கத்தை தரிசனம் செய்வதே பெரிய புண்ணியம் என்பார்கள். ஆனால் இந்த நாகலிங்க மரத்தை வழிபட்டால் ஒரே சமயத்தில் ஆயிரக்கணக்கான சுயம்பு லிங்கங்களை பூஜித்த பலன் கிடைக்கும் என்பது ஐதீகம். அந்த அபூர்வமரம் மதுரை மாரியம்மன் தெப்பக்குளத்தின் மைய மண்டபத்திலும், அருகிலுள்ள முக்தீஸ்வரர் ஆலயத்திலும் உள்ளது.

ஏகாந்தத்தில் சில நாட்களாவது சாதகன் ஒருவன் இருப்பது அவனுக்கு பெருநன்மையை விளைவிக்கும். அவ்வேளையில் உலகத்தில் தனக்கு உற்றார் உறவினர் இருக்கிறார்கள் என்ற எண்ணமே அகன்று போய்விடவேண்டும். தன்னையும், தான் வணங்கும் தெய்வத்தையும் தவிர வேறு யாரைப் பற்றிய எண்ணமும் அப்பொழுது வரலாகாது. - **பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர்**

பணப்பொருத்தமா..? மனப்பொருத்தமா...?

- ப்ருக்பாண்ட் அண்ணாமலை, கோவை



நகரத்தார்குரல் நவம்பர் 99 இதழில் இரண்டொரு எழுத்துப்பிழைகள் மாற்றம் தவிர விளம்பரங்களில் எந்தவித மாற்றமும் செய்வதில்லை என்று குறிப்பிட்டு இருக்கிறீர்கள். நீங்கள் செய்வது மிகச் சரியானதுதான்.

'மறுதார மணமகன் தேவை என்ற விளம்பரத்தில் மறுதாரம் என்ற சொல் ஆண்பாலுக்குப் பொருந்தாது என்பது உண்மைதான் விளம்பரத்தைக் கொடுத்த பெண் அதைக் கவனிக்காமல் அனுப்பி விட்டார் போலும். அதனால் யாருக்கும் பெரிய நட்டமோ குழப்பமோ ஏற்படக் காரணமில்லை ஏனெனில் விளம்பரத்தின் உள்ளே சென்று பார்த்தால் ஒரு பெண் தன் சம்பளம் தனக்கு எத்தகைய ஆண்மகன் திருமணத்திற்கு வேண்டும் என்று தெளிவு படுத்தியிருக்கிறார்.

பொறுப்புள்ள நல்ல குணம் கொண்ட வாழ்க்கைத் துணைவர் தேவை என்கிறார். நல்ல கணவன் எப்படி இருக்கவேண்டும் என்பதற்கு இலக்கணம் கூறியிருக்கிறார்.

இப்பொழுது சமூகத்தில் பெண்களுக்கு ஏற்படும் கொடுமைகள் மேற்கண்ட விளம்பரத்தில் மறைந்து கிடக்கின்றன. மறுமனைவிக்கு மறுதாரம் என்னும் சொல் வழக்கில் இருப்பதுபோல் மறுகணவன் என்ற சொல் வழக்கில் இல்லை என்பதால் அவளுடைய உரிமையைப் பறிக்க முயல்வது பெண்ணினத்திற்குச் செய்யும் பெருங்கேடாகும்.

உண்மையைக் கூறி, ஒழுக்கத்தோடு நேர்மையாக வாழ நினைக்கும் எந்தப் பெண்ணும் இப்படித்தான் மறுகல்யாணம் செய்து கொண்டு நேர்மையாக வாழ நினைப்பாள். நாம் ஏன் குறுக்கே நிற்கவேண்டும்?

நகரத்தார் சமூகத்திற்கு நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது என்று பழ. கருப்பையா அவர்கள் சொல்லுகிறார். இந்த நெருக்கடி பல ஆண்டுகளுக்கு முன்பே தோன்றி வளர்ந்து கொண்டிருக்கிறது. முதல் நெருக்கடி வரதட்சணைக் கொடுமை. சமூகப் பெரியவர்கள் ஒன்றுகூடி ஒரு நல்ல முடிவுக்கு வரவேண்டும். இலலை என்றால் நமது பெண்கள் பிற சமூக ஆண்களை நாடிச்சென்று திருமணம் செய்து கொள்ளுவது இன்னும் அதிகமாகும்.

இரண்டாவது நெருக்கடி மனைவியை இழந்த ஆண்மகன் மறுமணம் செய்து கொள்வதுபோல், கணவனை இழந்த பெண் மறுமணம் செய்து கொள்வதை சமூகம் அங்கீகரிக்கவேண்டும் இதில் ஏன் ஆணுக்கொரு நீதி? பெண்ணுக்கொரு நீதி?

மூன்றாவது நெருக்கடி விவாகமுறிவு (டைவர்ஸ்) இப்பொழுது அதிகமாகிக் கொண்டே வருகிறது. இதற்குக்காரணம் பொருந்தாதத் திருமணம். நம் சமூகத்தில் கல்யாணப்பேச்சை எடுத்தாலே, முதல் கேள்வி பெண்வீட்டார் எவ்வளவு தொகை தருவார்கள், எத்தனை பவுன் நகை போடுவார்கள், வைரநகை நிச்சயம் வேண்டும் என்பதில் தொடங்கி

முறைச்சிட்டையில் முடிகிறது. மனக் கசப்புகள் ஏற்படுகின்றன. சிலமாதங்களில் விவாகமுறிவு ஏற்படுகிறது. இரண்டு லட்சம் ரொக்கம் மற்றும் நகை கொடுத்து அந்த மணமகனை மணந்து கொள்ள, அடுத்த பெண் க்யூவில் நிற்கிறாள். மணமுறிவாள் ஒதுக்கப்பட்ட பெண் அம்போ என்று விடப்படுகிறாள். ஆணுக்கொரு நீதி பெண்ணுக்கொரு நீதி என்பது ஒழிக்கப்பட வேண்டும்.

கல்யாணத்திற்கு முதல்படி **பணப் பொருத்தம் அல்ல, மனப்பொருத்தம் தான்.** இதைத்தான் 'அன்புடைய நெஞ்சம் தாங்கலந்தனவே' என்று வள்ளல் பெருமான் அழகாகச் சொன்னார். வாழ்க்கைத்துணை என்று வள்ளுவர் பசுமரத்தாணிபோல் பதியவைத்தார். ஆணுக்கும் பெண்ணுக்கும் உள்ள சமஉரிமையை நிலைநாட்ட "Life Partner" என்று ஆங்கிலத்தில் சொன்னார்கள்.

கலப்பு மனங்களால் நமது சமூகத்தின் தனித்தன்மை கெட்டுவிடும் என்று முன்பு ஒருமுறை குரல் ஆசிரியர் வி.என்.சிதம்பரம் எழுதியிருந்தார்கள். அது முற்றிலும் உண்மையே. அதைத்தடுத்து நிறுத்த நாம் மனம் மாறி, மேலே சொல்லப்பட்டுள்ள தீமைகளை ஒழிக்க முன்வரவேண்டும்.

மதுரையில் மொத்த மருந்து வணிகம், சென்னையில் தோல் பதனிடும் கெமிக்கல் ஸ்டாக்கிஸ்ட் என பல்வேறு தொழில்களை சிறப்புடன் ஆற்றி வரும் நெற்குப்பை

சு.அ.பழ. அடைக்கப்பசெட்டியார்

அவர்களுடன் ஓர் இனிய சந்திப்பு...

சந்திப்பு: சி. நாகேஸ்வரன்



குரல் : ஐயா வணக்கம்... எங்கள் நகரத்தார்குரல் திங்களிதழின் சார்பாகவும், அதன் ஆயிரக்கணக்கான வாசகர்களின் சார்பாகவும் எங்கள் ஆசிரியர் மீனாட்சி திருமைந்தர் வி.என்.சிதம்பரம் அவர்களின் சார்பிலும் வணக்கங்களும், வாழ்த்துக்களும்...

அவர் : நான்தான் உங்களுக்கும், அண்ணன் வி.என்.சிதம்பரம் அவர்களுக்கும் நன்றி சொல்லவேண்டும். எத்தனையோ சாதனையாளர்களையெல்லாம் தேடிப்பிடித்து நகரத்தார்குரல் பேட்டி கண்டு சமுதாய விழிப்புணர்வை ஏற்படுத்தும்வண்ணம் வெளியிட்டு வருகிறீர்கள். புத்தகமும் ஏராளமான செய்திகளைத் தாங்கி சிறப்புடன் வெளிவருகிறது. நகரத்தார்குரல் மாதஇதழால் நகரத்தாருக்கே பெருமை என்றுகூடச் சொல்லுவேன்...

குரல் : தங்களின் சொந்த ஊர், கோயில் பற்றிக் கூறுங்களேன்...?

அவர் : என் சொந்த ஊர் நெற்குப்பை. நான் நேமம் கோயிலைச் சேர்ந்தவன். உங்கள் ஆசிரியர் அண்ணன் வி.என்.சிதம்பரம் அவர்களும் நானும் ஒரே கோயிலைச் சேர்ந்த பங்காளிகள் என்றுகூடச் சொல்லலாம்.

குரல் : தங்களின் பெற்றோர் மற்றும் உடன்பிறந்தோர் பற்றி சொல்லலாமா...?

அவர் : நான் வேந்தன்பட்டியில் பிறந்தவன். என்னை சிறுவயதிலேயே நெற்குப்பை பழனியப்பசெட்டியார் - அலமேலு ஆச்சி தம்பதியர் சுவீகாரம் எடுத்துக் கொண்டு விட்டார்கள். என் பெற்றோர் என்றால் பழனியப்பசெட்டியாரும், அலமேலு ஆச்சியும் தான் என்றாலும் என்னை சுவீகாரம் தந்த என்னைப் பெற்றவர்கள் நல்லகுமார் செட்டியார் - மீனாட்சி ஆச்சி. வேந்தன்பட்டியில் பிறந்து நெற்குப்பைக்கு சுவீகாரமாக வந்து விட்டேன்.

என்னோடு உடன்பிறந்தவர்கள் ஆண்கள் மூன்று பேர். பெண்கள் மூன்று பேர். நெற்குப்பையில் எனக்கு ஐந்து சகோதரிகள்.

குரல் : தங்கள் இளமையில் எங்கு கல்வி கற்றீர்கள்...?

அவர் : பொன்னமராவதி வலையபட்டி வலம்புரி வடுகநாதன் உயர்நிலைப்பள்ளியில் எஸ்.எஸ்.எல்.சி வரை படித்தேன். அதற்குமேல் படிக்கவில்லை. சுவீகாரம் வந்தவுடன் தகப்பனார் பழனியப்பசெட்டியாருக்கு மலேயாவில் வட்டிக்கடை

இருந்தது. அந்தத் தொழிலைக் கவனிக்க மலேயாவிற்கு சென்று விட்டேன்.

குரல் : தங்கள் மனைவி, மற்றும் குழந்தைகள் பற்றி சொல்லலாமா...?

அவர் : என் மனைவி என் சொந்த ஆச்சிமகள் தான். பெயர் முத்தாத்தாள் ஆச்சி. ஊர் நெற்குப்பை. எங்களுக்கு மூன்று பையன்கள். நான்கு பெண்கள். பெண்களுக்கு திருமணம் முடித்து கொடுத்து விட்டோம். இரண்டு பையன்களுக்கும் திருமணம் முடித்து விட்டது. கடைசிப்பையன் எம்.பி.ஏ., படித்து வருகிறான்.

குரல் : வட்டித்தொழிலிருந்து எப்படி மருந்து வணிகத்தொழிலுக்கு வந்தீர்கள்...?

அவர் மருந்து மொத்த வியாபாரத்தை என் சம்பந்தி அவர்கள் செய்து வந்தார்கள். தந்தையார் பழனியப்பசெட்டியார் இருக்கும்போதே நாங்கள் அந்தத்தொழிலில் பார்ட்னராக சேர்ந்தோம். அப்புறம் கொஞ்சம் விரிவுப்படுத்தி மதுரையில் முத்து மெடிக்கல் ஏஜென்ஸீஸ் என்ற பெயரில் மருந்து மொத்த வியாபாரம் செய்து வருகிறோம்.

குரல் : வேறு என்ன தொழில் செய்து வருகிறீர்கள்...?

அவர் : சென்னையிலும், ராணிப்பேட்டையிலும் மும்பையிலிருக்கும் லெதர் கெமிக்கல் ஸ்டாக்கிஸ்ட் எடுத்து நடத்தி வருகிறோம். தேவராத்தில் ஏலக்காய் மொத்த வியாபாரமும் செய்து வருகிறோம். முத்து நோட்புக் பாடநூல் தயாரித்து வருகிறோம்.

அந்தத்தொழிலும் சிறப்பாக நடந்து வருகிறது. தொழிலை கவனமாகவும், நேர்மையாகவும் செம்மையாகச் செய்தால் எந்தத்தொழிலையும் சிறப்பாகச் செய்யலாம்.

குரல் : தோல் பதப்படுத்த கெமிக்கல் எந்தவகையில் உதவுகிறது...?

அவர் : உப்புத்தோலாக வரும்போது அதைப் பதப்படுத்தி பெல்ட் மற்றும் லெதர் செருப்பு போன்றவை தயாரிப்பதற்கும், ரோமங்களை நீக்கி பதப்படுத்தும் வரையிலும் இந்த கெமிக்கல்ஸ் ராமெட்டிரியலாக இருக்கிறது.

தமிழகம் முழுவதும் தோல் லெதர் கம்பெனிகளுக்கு கெமிக்கல் விற்பனை செய்து வருகிறோம். லெதர் கம்பனியை என் அண்ணன் நாகப்பன் அவர்களோடு செய்து வந்தேன். பிறகு தனியாக இந்த கெமிக்கல் ஸ்டாக்கிஸ்ட் எடுத்து செய்து வருகிறேன். தோல் தொழிலும் இப்போது அவ்வளவாக நன்றாக இல்லை. என் இரண்டாவது பையன் சென்னை, ராணிப்பேட்டை கெமிக்கல் தொழிலை கவனித்து வருகிறார். மதுரை மருந்து வணிகத்தில் என் இரண்டாவது மாப்பிள்ளை பார்ட்னர் அவர் பார்த்துக் கொள்கிறார்.

குரல் : உங்கள் தொழிலில் ஆச்சி ஆலோசனை கூறுவார்களா...?

அவர் : ஆலோசனை அடிக்கடி சொல்வார்கள். அவர் ராசியானவர் என்றுகூடச் சொல்லலாம். அவரின் பெயரிலேயேதான் எல்லாத் தொழிலும் நடத்தி வருகிறோம். அவரின் பெயர் முத்தாத்தாள். ஆகவே முத்து மெடிக்கல், முத்து நோட்புக், முத்து அன் கோ என்று எல்லாமே அவரின் பெயரில் தான்.

குரல் : இந்தத் தொழிலில் உங்களுக்கு வழிகாட்டியவர்கள் யார்...?

அவர் : நகரத்தார்கள் எப்படி என்றால் ஒருவர் ஒரு தொழிலை ஆரம்பித்து விட்டால் எல்லோரும் அதேதொழிலை செய்ய முன் வருவார்கள். எனக்கு வழிகாட்டுதல்

என்று இல்லை. வட்டித்தொழிலிருந்து நகரத்தார்கள் மாறிமாறி வேறுவேறு தொழில் செய்யத் துவங்கிவிட்டார்கள். அப்படித்தான் நானும் வட்டித்தொழிலை விட்டு இதுபோன்ற தொழில்கள் தொடங்கி நடத்தி வருகிறேன்.

குரல் : உங்கள் நண்பர்கள்...? நீங்கள் ஆற்றிய சமூகப்பணிகள் பற்றி...?

அவர் : நகரத்தார்களில் தொழில்ரீதியான நண்பர்கள் நிறையபேர் உள்ளனர். மதுரையில் "Social Recreation club" என்று ஒரு அமைப்பை நிறுவியுள்ளோம். அதில் நான் தலைவராக பதினைந்தாண்டுகளாக இருந்து வருகிறேன். நகரத்தார்கள் சுமார் 350 பேர் உறுப்பினராக உள்ளனர். ஏறக்குறைய அதுவும் நகரத்தார் சங்கம் போன்றதுதான். அந்தச் சங்கத்திலிருந்து திருமணநிதி உதவி, ஏழ்மையான மாணவர்களுக்கு கல்விநிதி உதவியும் வழங்கி வருகிறோம். நெற்குப்பையில் நகரத்தார்கள் கோயிலான சுப்பிரமணியசுவாமி ஆலய கும்பாபிஷேகம் நடத்தியிருக்கிறோம். அதைப்போலவே திருமயம் அருகில் உள்ள முனைசந்தை என்ற ஊரில் உள்ள அய்யனார் ஆலயத்தின் திருப்பணிக்குழுவிற்கு நான் தலைவராக இருந்து திருக்குட நன்னீராட்டு விழாவினையும் சிறப்பாக நடத்தி இருக்கிறோம். நேமங்கோயில் "Charitable Committee" 20 பேர் உறுப்பினர்களாக உள்ளோம். அவர்களில் நான்கு, நான்கு பேராக பிரித்து கமிட்டி அமைத்திருக்கிறோம். அந்தக்கமிட்டியில் நான், அண்ணன், வி.என்.சிடி., எல்.பி. வீரப்பசெட்டியார், வடுகபட்டி அண்ணாமலை செட்டியார் போன்றோர் உறுப்பினர்களாகவும் இருந்து வருகிறோம்.

எங்கள் அய்யா நெற்குப்பையில் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு இடம் கொடுத்து கட்டடம் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். நகரத்தார்களில் ஏழ்மையில் உள்ளவர்களுக்கும் என்னால் இயன்ற உதவிகளையும் செய்து வருகிறேன்.

குரல் : உங்கள் நிறுவனங்களில் எத்தனைபேர் பணிபுரிகிறார்கள்...?

அவர் : எங்கள் நிறுவனங்களில் பணிபுரியும் 50, 60 பேர்களில் நகரத்தார்கள் பாதிக்கு மேல் உள்ளனர். அவர்களுக்கு எங்கள் நிறுவனத்தில் வேலை வாய்ப்பில் முன்னுரிமை தந்து வருகிறேன். வரும் லாபத்தில் நன்றாகவே அவர்களுக்கு சம்பளம், போனஸ் வழங்கி வருகிறேன். பணிபுரிபவர்களும் என் மீதும் நிறுவனத்தின் மீதும் ப்ரியமாகவும், விசுவாசமாகவும் இருந்து வருகிறார்கள். அங்கு பணிபுரிபவர்கள் உயர்வுக்கும் நான் உதவி வருகிறேன்.

குரல் : திருமண சீதனம் கேட்பது பற்றி...?

அவர் : திருமணச்சீதனம் கேட்பது என்பதை தடுக்கவே முடியாது. சீதனம் வாங்கக்கூடாது என்று இளைஞர்கள் வேண்டுமானால் சொல்லலாம். பெற்றோர்களைக் காட்டிலும் வரும் இளைஞர் சமுதாயம் நினைத்தால் இதில் மாற்றத்தைக் கொண்டு வரலாம்.

குரல் : ஆடம்பரமான திருமணங்கள் தேவையா...?


அவர் : வசதி குறைவானர்கள் ஆடம்பரமாக திருமணங்களை நடத்துவதை குறைத்து விட்டார்கள் என்று நினைக்கிறேன். வசதியானவர்கள் செய்கிறார்கள் என்பதற்காக வறட்டு கௌரவத்துடன் கடன்வாங்கி செலவு செய்வது இப்போது குறைந்து வருகிறது. அநேகமாக திருந்தி வருகிறார்கள் என்றே நினைக்கிறேன். அதிக வசதியுள்ளவர்கள் ஆடம்பரமாக செய்வதை யாரும் சொல்ல முடியாதல்லவா...!

குரல் : மகளிர் மறுமணம் பற்றி...?

தொடர்ச்சி 37ஆம் பக்கம்...



அடைக்கப்பசெட்டியார் முத்தாத்தாள் ஆச்சி...



ஒரு விழாவில் கலந்து கொள்ள வருகை தந்த எம்.ஏ.எம். ராமசாமி செட்டியார் அவர்களை அடைக்கப்பசெட்டியார் வரவேற்கிறார்...



பள்ளி ஆண்டுவிழாவில் வாழ்த்துப் பெறுகிறார்...



மூத்தமகன் பழனியப்பன், மருமகள் லதா, பேரன் பேத்திகளோடு தம்பதியர்...



எஸ்.ஆர்.சி. சார்பில் கார்கில்நிதி வழங்கிறார்.



குடும்பத்தினரோடு...



மதுரை முன்னாள் எம்.பி. இராம்பாபுவுடன் அடைக்கப்பசெட்டியார்...



முனைசந்தை பனையுடை அய்யனார் ஆலய குடமுழுக்கு நீராட்டு விழா...



குடமுழுக்கு விழாக்குழுவின் தலைவர் அடைக்கப்பசெட்டியார் பாராட்டுப் பெறுகிறார்.



முத்து நிறுவனங்களின் புதுக்கணக்கை தொடக்குகிறார்...



ரஜினிகாந்த், எம்.என். நம்பியார் ஆகியோருடன் நமது ஆசிரியர் அய்யப்பன் கோயில் யாத்திரையின்போது மதுரை அழகர்கோயிலில்...



துக்ளக் ஆசிரியர் சோ அவர்களுடன் நமது ஆசிரியர்...

செய்தி 42-ஆம் பக்கம்...

ரஜினி எனும் வெற்றியின் ரகசியம்

- வி.என். சிதம்பரம் -



ரஜினிகாந்த் அவர்களின் 25 ஆண்டுகால கலைச்சேவையைப் பாராட்டி அவரது துணைவியார் லதாரஜினிகாந்த் அவர்கள் நடத்திய **ரஜினி-25** கலைவிழாவில் கலந்து கொள்ளும் வாய்ப்பைப் பெற்றேன். முதல்வர் கலைஞர், மூப்பனார் போன்றோர் வாழ்த்திய உரையும், இயக்குநர் பாலசந்தர் வாழ்த்தியதும் மற்றும் திரையுலகக் கலைஞர்கள் பெரும்பாலோர் கலந்து கொண்டு நடத்திய கலைநிகழ்ச்சிகளும் சிறப்பாக இருந்தது... ரசித்தேன்...

ஒவ்வொருவரும் தங்களின் பாணியில் ரஜினிகாந்த் எனும் அந்த அபூர்வமனிதருக்கு வாழ்த்துமழை பொழிந்தனர். வெள்ளமெனத் திரண்டிருந்த அந்தக்கூட்டத்தில் நானும் கரைந்து போனேன்...

நுழைவுக்கட்டணம் நிர்ணயித்திருந்தும் அவ்வளவு கூட்டம்... அந்த விழாவே ஓர் இலவச அழைப்பாயிருந்தால் எம்.ஜி.ஆர். பிலிம்சிட்டி தாங்கியிருக்குமா...? என்பது சந்தேகம்தான்.

இப்படி கலைநிகழ்ச்சிகளையும், வாழ்த்துக்களையும் கேட்டுக் கொண்டிருந்தபோது விழாவில் ஏற்புரையும் நன்றியுரையும் சொல்வதற்கு மைக் முன்னால் ரஜினி வந்தார். பேசினார். அவரின் அந்தப் பேச்சு என் இதயத்தைக் கவர்ந்தது. அந்த மேடைப்பேச்சில் முத்தாய்ப்பாக ஒன்று சொன்னார். நான் சில்லித்துப் போனேன். "என் வெற்றியின் ரகசியத்தை இன்று உங்களுக்குச் சொல்லப்போறேன்... கடந்த 38 வருஷங்களாக நான் காலையிலும், மாலையிலும் தியானம் செய்கிறேன். என் வெற்றிக்குக் காரணமே தியானம்தான். நீங்களும் காலையிலும் மாலையிலும் ஒரு அஞ்சு நிமிசமாவது தியானம் செய்யுங்க... வாழ்க்கையில் வெற்றி பெறுவீங்க. வரும் புத்தாண்டிலிருந்து தியானம் செய்வேன் என்பதை சபதமாக எடுத்துக்குங்க" என்று கூட்டத்தினருக்கு ஒரு வேண்டுகோள் வைத்தார். ஆகா... என்ன ஒரு தீர்க்கதரிசி ரஜினி என்று மகிழ்ந்தேன்...

தியானம் என்பது மனதை ஒருநிலைப் படுத்தி ஆழ்நிலையில் இருந்தால் மனதும், உடலும் பண்படும் என்பதை நானும் அறிந்தவன்தான்.

ஆனால் வருகை தந்திருந்த அந்தக் கூட்டத்தில் அவரின் ஆலோசனையை ஒரு ஐயாயிரம் பேராவது கேட்டு தியானம் செய்யும் வழக்கத்திற்கு மாறியிருப்பார்கள் என்பது என் நம்பிக்கை...

ஏனென்றால் ரஜினியின் அன்பு ரசிகர்கள் ரஜினி அவர்கள் திரையில் பண்ணும் ஸ்டைல்களையெல்லாம் கவனித்து அவரைப் போன்றே முடிவெட்டிக் கொள்வது, உடையணிவது, சிகரெட் குடிப்பது, அவரைப் போன்றே பேசுவது... போன்ற பழக்கங்களை எல்லாம் உள்வாங்கிக்கொண்டு அதன்படி நடப்பவர்களை நிறையப்பேரை சென்னையிலும், மதுரையிலும் மற்ற இடங்களிலும் கண்டு, கேட்டு அறிந்து கொண்டிருப்பவன் நான்...

அப்படி தங்களின் தலைவரின் ஸ்டைலைப் பார்த்துவிட்டு செய்யும் அந்த

ரசிகர்கள் தலைவர் தியானம் செய்யச் சொல்கிறார் என்றால் நிச்சயம் அனைவரும் செய்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. ரசிகர்களை பண்பட்டவர்களாக மாற்றவேண்டும். அதற்கு அவர்கள் தியானம் செய்யவேண்டும் என்ற தத்துவத்தை உணர்த்திய அவரின் உள்ளம் கண்டேன். பக்தியும், ஆன்மீகமும், கொண்ட கொள்கையில் உறுதியும், மனிதநேயமும் கொண்ட ரஜினி அவர்களின் வேண்டுகோளிட்டுப் பேசியது, நம்மை வாழவைத்தவர்களும் வெற்றி பெற வேண்டும் என்ற அந்த நல்ல எண்ணமும் இன்னும் அவரை வெற்றியின் சிகரத்திற்கு உயர்த்தும் என்று பெருமிதம் கொண்டேன்.

மறைமலை அடிகளும்... காணிக்கைகளும்...

(மேலைச்சிவபுரி முத்துராமன், திருப்பூர்)

அடிகளுக்கு ஒரு கெட்டபெயர். காணிக்கைகள் வாங்காமல் கூட்டங்களுக்கு வரமாட்டார். சொற்பொழிவாற்றமாட்டார் என்று.

அவர் கேட்டார். "ஐயா சொற்பொழிவாளர்கள் இளிச்சவாயர்களா? உங்களுக்காக வக்காலத்து வாங்கும் வக்கீல்களுக்குப் பணம் தருகிறீர்கள்! அவருடைய வழக்குரையைப் பொறுமையாகக் கேட்டுத் தீர்ப்புச்சொல்லும் நீதிபதிக்குப் பணம் தருகிறீர்கள்! உங்கள் வீட்டுத் திருமணத்திற்கு மேளம் வாசிப்பவன் சும்மாவா போகிறான்?

எங்கள் வேலையை விட்டுவிட்டுத்தானே, நீங்கள் சொன்ன இடத்தில் சொன்ன தலைப்பில் வந்து பேசிவிட்டுப் போகிறோம்! அதனால் ஏற்படும் உஷ்ணம் எங்கள் உடலை வருத்ததா? எங்கள் உடல் எஃகினால் வார்க்கப்பட்டதா? கூட்டத்தில் கல் எறிந்தால் முதலில் எங்களுக்குத்தான் ஆபத்து. பேச்சில் தவறு வந்தால் தவறுதலுக்கு ஆளாவதும் நாங்கள் தான்.

வாங்குகிற காசுக்கு கடனே என்று பேசாமல் உணர்ச்சியோடு, பொறுப்போடு பேசுகிறோமா என்று பாருங்கள். நீங்கள் நினைத்த பலன் கிட்டுகிறதா என்று ஆராயுங்கள். அதை விட்டுவிட்டு, எங்கள் வயிற்றில் தொண்டு, சேவை என்று அடிக்காதீர்கள்.

புலவனுக்கும் பசிக்கும், குடும்பம் உண்டு. அதில் கடமைகள் உண்டு என்பதைச் சற்றே கவனத்தில் வையுங்கள்" என்று ஆணித்தரமாகச் சொல்வார்.

அப்படிப்பட்டவர் தொண்டு, தமிழ் என்று வரும்போது எதையும் எதிர்பாராமல் கலந்து கொண்டதுதான் இந்தி ஒழிப்பிற்கு பெரிதும் துணை செய்தது.

இன்றைய பேச்சாளர்களுக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்படுகிறதாகத் தெரிகிறது.

முன்பு புலவர்களை மன்னர்களும், மன்னர் பின்னோர்களான நகரத்தார்களும் ஆதரித்து வந்தார்கள். குறிப்பாக கானாடுகாத்தான் வை.சு. சண்முகம் செட்டியார் அவர்கள் பாரதியாரை ஆதரித்து, குடும்பத்துடன் வந்து செட்டிநாட்டில் தங்கியிருக்கும்படி கூறியதாகவும், பாரதியாரின் மனைவி வரச்சம்மதிக்காததால் வரவில்லை என்றும் நூல்களின் வாயிலாக அறியமுடிகிறது.

வை.சு.ச. அவர்கள் காமராசரைக் காணச் சென்றபோது, அவரே எழுந்து வந்து, பாரதியாரை அவரது வாழ்ந்த காலத்திலேயே ஆதரித்த வள்ளலே வருக என வரவேற்றாராம்.

30ஆம் பக்கத்தொடர்ச்சி...

அவர் : மணமுறிவு பெற்ற பெண்ணோ, இளம் விதவையோ மறுமணம் செய்து கொள்வதை நான் வரவேற்கிறேன். மனைவியை இழந்த ஆடவன் மறுமணம் செய்து கொள்ளும்போது கணவனை இழந்த பெண் மறுமணம் செய்து கொள்வது ஒன்றும் தவறில்லை. ஆணுக்கு ஒரு நீதி...? பெண்ணுக்கு ஒரு நீதியா...?

அந்தக்காலத்தில் வெளிநாட்டிற்கு செல்லும்போது பெண்களை அழைத்துக் கொண்டு போகமாட்டார்கள். ஆனால் இன்று கணவனும் மனைவியும் வெளிநாடெல்லாம் போகிறார்கள். இது காலத்திற்கேற்ற மாறுதல்தானே...

அந்தக்கால நகரத்தார்கள் இளைஞர்கள் கிராப், மீசை இதையெல்லாம் வைக்கக் கூடாது என்று இருந்தார்கள். ஆனால் இன்று அப்படிப்பட்ட இளைஞர்கள் இல்லையே! இதுவும் காலத்திற்கேற்ற மாற்றம் தானே...!

அந்தக்காலத்தில் திருமணம் என்றால் மாப்பிள்ளைகாரர் ஒரு மூலையில் இருப்பார். மணப்பெண் ஒரு மூலையில் இருப்பாள். ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்ளாமலேயே உறவுக்காரப்பெண்தான் மாங்கல்யம் சூட்டுவாள். ஆனால் இன்று அப்படியில்லையே... அந்தப் பழமையிலிருந்து மாப்பிள்ளையே மாங்கல்யம் சூட்டும் அளவிற்கு காலமாறுதல் ஏற்பட்டுள்ளதே... மாறுதல் என்பதை தவிர்க்க இயலாது என்பதையும் எல்லோரும் உணரவேண்டும். என்ன மாறுதலானாலும் நகரத்தாரின் மரபும், பண்பாடும் நிச்சயம் காப்பாற்றப்படவேண்டும். காப்பாற்றப்படும் என்ற நம்பிக்கை எனக்கு ரொம்ப இருக்கிறது.

குரல் : நகரத்தாரின் பண்புகளைப் பற்றி... ?

அவர் : நகரத்தாரிடம் அந்தக்காலத்தில் ஒரு பழக்கம் இருந்து வந்தது. வாய்மொழியில் சொன்னாலே பணம் கிடைக்கும். பாண்டு, புரோநோட்டு வருவதற்குமுன்பாக நான் சொல்கிறேன். ஆனால் இன்று ரப்பர் வைத்து அழித்துவிடும் காலத்திலும் வட்டியை சரியாக வாங்கும் பண்பு. அநியாய வட்டிக்கு ஆசைப்படாத அந்த மரபு நகரத்தாரின் நாணயம் எல்லாம் எல்லாக்காலத்திலும் ஒரேமாதிரியாகத்தான் இன்றுவரை நடந்து வருகிறார்கள்.

குரல் : எங்கள் ஆசிரியர் மீனாட்சிமைந்தர் வி.என்.சிதம்பரம் பற்றி... ?

அவர் : அண்ணன் வி.என்.சிடி. என் உடன்பிறவா சகோதரர் போன்றவர். நானும் அவரும் இன்றுவரை நல்ல நெருங்கிய நண்பர்களாக சகோதரர்களாக இருந்து வருகிறோம்.

ஒரு 25 ஆண்டுகளுக்கு முன்னர் அவரது பாட்டனார், தகப்பார் அவர்களைப் பற்றி நான் கேள்விப்பட்ட செய்தியை குரலின் வாசகர்களுக்கு சொல்வது பயனுள்ளதாக இருக்கும் என நினைக்கிறேன்.

குரல் : அப்படிப்பட்ட சுவையான நிகழ்ச்சி இருந்தால் சொல்லுங்களேன்... ?

அவர் : அவர்களுக்கு மலேசியாவில் ஆறு கடைகள் மூவாரில் இருந்தன. வள்ளியப்ப செட்டியாரின் ஏஜெண்ட்தான் நிர்வகித்து வந்தார். வள்ளியப்பசெட்டியார் மலேசியாவில் வரும்போது சிங்கப்பூரில் அவரை வரவேற்றுச் செல்லும் வழக்கத்தை அவரின் கூட்டாளி அருணாசலம்பிள்ளை என்பவர்தான் செய்து வந்தார். அருணாசலம்பிள்ளை ரொம்ப நேர்மையானவர். தைரியசாலி. யாருக்கும் பயப்படவே மாட்டார்.

குரல் : அருணாச்சலம்பிள்ளை பற்றி எங்கள் ஆசிரியர் சொல்லியிருக்கிறார்...?

அவர் : அருணாச்சலம்பிள்ளை 1933-களில் சுயமரியாதை இயக்கத்தைச் சேர்ந்தவா மிகவும் திறமைசாலி. வள்ளியப்பசெட்டியார் அதிக இறைநம்பிக்கை உடையவர் ஆனால் அருணாச்சலம்பிள்ளையோ இறைநம்பிக்கையே இல்லாதவர்

அந்த சுயமரியாதை இயக்கவீரரான அருணாச்சலம்பிள்ளை ராங்கியம் வள்ளியப்பசெட்யாருக்கு கடிதம் எழுதும்போது பிள்ளையார்சுழி போட்டுத்தான் கடிதம் எழுதுவாராம். கடிதம் எழுதியதும் கடைசியாக அண்ணாமலையார் துணை என்றுதான் எழுதுவார். அவரின் சுயமரியாதை இயக்கநண்பர்கள் கேட்டால் அவர் என் முதலாளி. அவர் அப்படித்தான் எழுதவேண்டும் என எனக்குச் சொல்லியிருக்கிறார். அந்தக்கடமையை நான் செய்யவேண்டும். காசுக்காக நான் இதை எழுதவில்லை. அவரிடம் பணியிலிருக்கும் பணியாளனான நான் அந்தக்கடமையைத்தான் செய்து வருகிறேன். கொள்கை வேறு... தொழில் கடமை வேறு... நான் என் முதலாளி வள்ளியப்பசெட்டியாருக்கு மட்டும்தான் இதுபோன்ற கடிதம் எழுதுகிறேன். மற்றவர்களுக்கு அப்படி எழுதுவதில்லை என்பாராம்.

குரல் : சிறந்த கடமைவீரர் அப்படித்தானே...?

அவர் : ஆமாம்... இந்தக்கடமையின் தோன்றல்தான் பிற்காலத்தில் அறிஞர் அண்ணா அவர்கள் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்று தி.மு.கழகத்தின் கொள்கையாக அறிவுறுத்தினார்கள்.

குரல் : அருணாச்சலம்பிள்ளை அவர்கள் நிலம் வாங்கும்தன்மை வித்தியாசமாக இருக்குமாமே...?

அவர் : ஆமாம்... அருணாச்சலம்பிள்ளையவர்கள் சிறந்த வேளாண்மை ஆராய்ச்சி நிபுணராகவே இருந்தார். ரப்பர் தோட்டங்களுக்காக நிலங்களை வாங்கும் பொறுப்பை வள்ளியப்பசெட்டியார் பிள்ளையவர்களிடம் ஒப்படைப்பார். அவர் வாங்கும் நிலங்களில் உள்ளமண்ணை அள்ளி வாயில் போட்டு தின்பார் பிறகு மண்ணின் ருசி பார்த்து, இந்த மண்ணில் ரப்பர் பயிரிடலாம், இதில் பயிரிடக்கூடாது என்று ஆராய்ச்சி செய்வார். அவர் சொல்படியே அந்த மண்ணின் தன்மையும் இருக்கும். இவ்வாறு விசுவாசமான ஓர் உழைப்பாளியாய் பிள்ளையவர்கள் இருந்தார்.

குரல் : அவரிடம் கை பழக ஆசிரியரின் தந்தையார் நாகப்பசெட்டியார் சென்றாராமே...?

அவர் : ஆமாம். அப்படி விசுவாசமான திறமையான ஓர் உழைப்பாளியிடம் வள்ளியப்பசெட்டியார் தன் மகன் நாகப்பசெட்டியாரை அருணாச்சலம் பிள்ளையிடம் கை பழகுவதற்காக அனுப்பி வைத்தார் நாகப்பசெட்டியார் கப்பல் ஏறியவுடன், அவரிடம் வள்ளியப்பசெட்டியார் அப்பு என்று அழைத்து தென்னைமரம், பனைமரம் ஏறுவதென்றால் மரமேற பழகவேண்டும். அப்போதுதான் மரத்தின் உயரத்தில் ஏறமுடியும். அருணாசலம்பிள்ளையிடம் நீ கை பழகினால்தான் வாழ்க்கையில் உயரமுடியும் என்று சொல்லி அனுப்பி வைத்தாராம்.

குரல் : தந்தை வள்ளியப்பசெட்டியாரின் சொல்படி நாகப்பசெட்டியார் இருந்தாரா...?

அவர் : நிச்சயமாக... தந்தை சொல்மிக்க மந்திரமில்லை என்று அருணாசலம்பிள்ளையை தனது குருவாக ஏற்றுக்கொண்டு அவர் சொல்வதைக் கேட்டு கைபழகி வந்தார்.

அந்த கடைகளுக்கெல்லாம் அவர் ஒரு முதலாளி என்றாலும் குருபக்தியின் காரணமாக பிள்ளையவர்களிடம் அவர் சொல்கிறபடி நடந்து வந்தார்.

குரல் : வேறு ஏதாவது சுவையான செய்தி...?

அவர் : இன்னொரு நிகழ்ச்சி... அருணாச்சலம்பிள்ளை தோளில் துண்டு போட்டுத்தான் நடப்பார். சுயமரியாதை வீரர் அல்லவா...! ஆனால் வள்ளியப்பசெட்டியார் முன்பாக மட்டும் துண்டு போடமாட்டார். ஏன் என்றால் எனக்கு முதலாளி வள்ளியப்பசெட்டியார். அவருக்கு நான் மரியாதை தரவேண்டியது என் கடமை என்பார்.

குரல் : அருணாச்சலம்பிள்ளை பற்றி வள்ளியப்பசெட்டியாருக்கு மொட்டை கடிதம் போட்டார்களாமே...?

அவர் : ஆமாம். அருணாச்சலம்பிள்ளை மீது பொறாமை கொண்ட சிலர் அவரைப் பற்றி வள்ளியப்பசெட்டியாருக்கு இல்லாததும் பொல்லாததுமாக மொட்டைக்கடிதம் எழுதிவிட்டனர். அருணாச்சலம்பிள்ளைக்கு தகவல் கொடுக்காமல் சிங்கப்பூர் வந்தார். வள்ளியப்பசெட்டியார் இறங்கி விசாரித்திருக்கிறார். ஆனால் தகவலெல்லாம் நல்லவிதமாக கிடைத்தது. உடனே கணக்கெல்லாம் எடுதது வந்து வள்ளியப்பசெட்டியாரிடம் வைக்கிறார். கணக்கெல்லாம் பார்க்கவேண்டாம் இருக்கட்டும் என்று செட்டியார் சொன்னார். அதெல்லாம் வேண்டாம். எனக்கு தகவல் கொடுக்காமல் நீங்கள் வந்ததையே நான் தவறாக நினைக்கிறேன். என்மீது தங்களுக்கு சந்தேகம் வந்துவிட்டதாக அறிகிறேன்... கணக்குகளைப் பாருங்கள் என்று அருணாச்சலம்பிள்ளை சொன்னார். வள்ளியப்பசெட்டியார் எவ்வளவோ வற்புறுத்தியும். போனஸ் எவ்வளவு வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளுங்கள் என்று சொல்லியும் அருணாச்சலம்பிள்ளை பணியிலிருந்து விலக முடிவெடுத்துவிட்டார். அதன்பிறகு ஒரு பெரியதொகையை பிள்ளைக்குக் கொடுத்து வழியனுப்பி வைத்தார் வள்ளியப்பசெட்டியார்.

குரல் : அதன்பிறகு பிள்ளையவர்கள் என்ன செய்தார்...?

அவர் : பிறகு அவர் சொந்த ஊரான சிறுகுடிக்கு வந்துவிட்டார். அப்போது மலேசியாவில் உள்ள ராஜா சர் அண்ணாமலை செட்யார் கடைக்கு ஆள் தேவை. நீங்கள் வந்தால் நல்லது என்று நண்பர்கள் மூலம் அழைப்பு விடுக்க அதற்கு அருணாச்சலம்பிள்ளை செட்டிநாட்டுக்கு வேண்டுமானால் உங்கள் முதலாளி ராஜாவாக இருக்கலாம். ஆனால் எனக்கு வள்ளியப்பசெட்டியார்தான் ராஜா என்று கூறிவிட்டு மலேசிய மண்ணை மிதிக்கமாட்டேன் என்று சொல்லிவிட்டு சிறுகுடியிலேயே இருந்து விட்டார். முதலாளி சந்தேகப்பட்டதற்காக பணியிலிருந்து நின்ற பிறகு எவரிடமும் பணியமர மாட்டேன் என்ற அருணாச்சலம்பிள்ளை பெரியவரா...? பொறாமைக்காரர்கள் சிலரால் சந்தேகப்பட்டு விட்டோமே எனவருந்தி பெருந்தொகை கொடுத்த வள்ளியப்பசெட்டியார் பெரியவரா...? என நான் வியந்ததுண்டு

இப்படி நேர்மை. உழைப்பு. பண்பாடு சிதையாமல் வாழ்ந்த அந்த முன்னோர்கள் செய்த புண்ணியங்களால் அண்ணன் வி.என்.சிடி.க்கு சிறப்பு... அப்படிப்பட்டவர் என் பங்காளி என்பது எங்களுக்குச் சிறப்பு...

நன்றி அய்யா... மிகவும் அருமையான இந்தப்பேட்டி சிறப்புற தந்தமைக்கு நன்றி... நாம் விடைபெற்றுக் கொண்டோம்...

உங்கள் குரல்

சிறப்பு...
நகரத்தார்குரல் ஒவ்வொரு இதழும் சிறப்பாக இருக்கிறது. ஆசிரியர் உயர்திரு. வி.என்.சிடி. அவர்களுக்கு எனது அன்பையும் நன்றியையும் இதன்மூலம் தெரிவித்துக் கொள்கிறேன். மாதந்தோறும் தாங்கள் அனுப்பி வரும் குரல் மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது.

– ***எல். சுந்தரம்,*** ஒக்கூர்.

தன்னம்பிக்கை...
வலையபட்டி பிஎல்.ஏ. சிதம்பரம் அவர்களின் பேட்டி இளைஞர்களுக்கு அதிகமான தன்னம்பிக்கையை தோற்றுவித்து விட்டது. எஸ்.எஸ்.எல்.சி. படித்த ஏழை நகரத்தார்களுக்கு நானே கண்டக்டர் லைசென்ஸ் எடுத்துக் கொடுத்து பணியமர்த்திக் கொள்கிறேன் என்ற அவரின் உள்ளம் சிறப்பு...

– ***லெ. சண்முகம்,*** கல்லூரணி.

அஞ்சல்தலை...
வள்ளல் அழகப்பசெட்டியார் அவர்களுக்கும், கவியரசர் கண்ணதாசன் அவர்களுக்கும் அஞ்சல்தலை வெளியிடப்படவேண்டும் என்ற பிஎல்.ஏ.சிடி. பேட்டியில் கூறியிருப்பது நிச்சயம் நிறைவேறும்.

– ***ரா. ராமநாதன்,*** காரைக்குடி

ஜெயிப்பார்...
பிஎல்ஏ. அவர்கள் தஞ்சை நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி வாய்ப்பை இழந்தாலும் எழுபதாயிரம் வாக்குப் பெற்றது பெருமைதான்... ஆனாலும் வரும் தேர்தலில் வெற்றி பெறுவேன் என்ற நம்பிக்கையை வாழ்த்துகிறேன். நிச்சயம் ஜெயிப்பார்...

– ***திருநாவுக்கரசு,*** தஞ்சை

கற்றுக்கொண்டேன்...
பால்கொழுக்கட்டையும், வெள்ளைப் பணியாரமும் கற்றுக் கொண்டுவிட்டேன். வாங்க ஆச்சி சமைக்கலாம் தொடர்ந்து வெளியிடுங்கள் சார்...

– ***அலமேலு,*** மலேசியா...

பொன்னாடைப்புரட்சி...
பெருமைக்குரிய நகரத்தார் பகுதியில் இளைஞர்களுக்குத் தெரியாத பல செய்திகளை கதை சொல்வதைப்போல வி.என்.சிடி. எழுதுகிறார். வித்வான்களுக்கு போடும் பொன்னாடைக்குப்பின் இவ்வளவு பெரிய புரட்சியா...?

– ***கல்கி சரவணன்,*** திருப்பூவனம்.

அருமை...
கம்பளித்திருடர்கள் திருந்திய கதை உண்மையிலேயே அருமை. தென்கச்சி என்றால் தென்கச்சிதான்...

– ***சிவராம்கி,*** மதுரை.

சிறப்பறிந்தேன்...
தைப்பூச வழிநடைப் பயணம் பற்றிய பழனி ஆலயக்குறிப்பை அனைவரும் அறியும்வண்ணம் வெளியிட்டு, நகரத்தார் இளைஞர்களுக்கு வழிநடைப்பயணத்தின் காரணத்தையும், சிறப்பையும் வெளியிட்ட குரலுக்கு நன்றி... – ***மணியன்,*** கோவை.

புதுமையான நடை...
நானும் என் திராவிட இயக்க நினைவுகளும் என்ற இராம. சுப்பையா அவர்களின் அனுபவங்களை அவரது மகன் சுப. வீரபாண்டியன் எழுதி வருவது ஒரு புதுமையான நடை. தொடர் தொடரட்டும்... – ***செந்தில்,*** காரைக்குடி.

சிரிப்போம்... சிந்திப்பதற்காக...
அறிஞர் அண்ணாவும், நாவலர் நெடுஞ்செழியனும் நடித்த நீதிதேவன் நாடகத்திலிருந்து அறிய தந்த கு.ஞா. சிரிப்போம்... சிந்திப்பதற்காக... என்பதை உணர்த்துவதாயிருந்தது...

– ***சுந்தரபாண்டியன்,*** சேலம்.

இல்லறம்...
மனைவி மரித்தார்... மீனை வெறுத்தார்... எனராசாராம் அவர்களைப் பற்றி ஆசிரியர் எழுதியிருப்பதும் இதுதானோ உண்மையான இல்லறம் கண்டோம்.

– ***கண. வேலாயுதம்,*** கீழச்சிவல்புரி

சொன்னதும்... கேட்டதும்

என்னைப் பொறுத்தமட்டில் என்னைத் தாக்கியவர்களை 9 ஆண்டுகளுக்கு முன்பே நான் மனதளவில் மன்னித்து விட்டேன். அவர்கள் எந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்கள்... எதற்காக என்னைத் தாக்கினார்கள் என்பதை நீதிமன்றம் விசாரித்து முடிவு செய்யட்டும்...

– நீதிமன்றத்தில் முன்னாள் மத்திய நிதியமைச்சர் ப. சிதம்பரம்

மனோஜ் நைட் சியாமலன் இந்தியாவில்தான் பிறந்தான். இரண்டரை மாத குழந்தையாக இருந்தபோது அமெரிக்காவுக்கு சென்று விட்டோம். அவன் இப்போது ஆஸ்கர் விருதுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ள டைரக்டராக இருக்கிறான் என்பதை நினைக்கும்போது சந்தோஷமாக இருக்கிறது. இந்தியனாக அதிலும் தமிழனாக அவன் இருப்பது ரொம்பப் பெருமையாக இருக்கிறது.

– 'சிக்ஸ்த் சென்ஸ்' எனும் ஆங்கிலப்படம் ஆஸ்கர்விருதுக்கு தேர்ந்தெடுக்கப்படவுள்ளது. அதுகுறித்து இயக்குநர் மனோஜ் நைட் சியாமலனின் தாய் ஜெயா சியாமலன் ஒரு நாளிதழில்...

உரிமை வழக்கில் கீழ்கோர்ட்டு தீர்ப்பை எதிர்த்து ஐகோர்ட்டில் அப்பீல் செய்கிறார்கள். இந்த அப்பீல் மனுக்கள் மீது விசாரணை நடத்தி முடிக்க 10 முதல் 15 ஆண்டுகள் ஆகிறது. இதனால் வழக்குத் தொடர்ந்தவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். நம்முடைய நீதித்துறையின் குறைபாடே தாமதமாக கிடைக்கும் நீதிதான். இதையடுத்து மக்களுக்கு விரைவில் நீதி கிடைக்கவேண்டும் என்பதற்காகத்தான் சிவில் நடைமுறைச் சட்டத்திருத்தம் செய்கிறோம்.

– மத்திய சட்டஅமைச்சர் ராம்ஜெத்மலானி

நான் ஒரு விவசாயி. கடந்த 94–95ஆம் ஆண்டில் 15 ஏக்கர் நிலம் வாங்கினேன். இதில் பண்ணை வீடு அமைத்தேன். மீதம் உள்ள நிலத்தில் திராட்சை, கொய்யா, மாதுளை, பப்பாளி, தர்பூசணி உட்பட பல பழங்களைப் பயிரிட்டு அதன்மூலம் எனக்கு வருமானம் கிடைத்தது. இதுதவிர ஏராளமான தென்னைமரங்களும் இருக்கின்றன. இந்த விவசாயத்தின் மூலம் கடந்த 7 ஆண்டுகளில் மொத்தம் 54 லட்சம் வருமான கிடைத்துள்ளது. விவசாயியின் வேளாண்மை வருமானத்திற்கு வரி விதிக்கக்கூடாது...

– வருமான வரித்துறையை எதிர்த்து ஐகோர்ட்டில் தாக்கல் செய்துள்ள மனுவில் முன்னாள் முதல்வர் ஜெ. ஜெயலலிதா

அரசியல் சாசனம் நமக்கு ஏமாற்றம் தந்திருக்கிறதா... அல்லது நாம்தான் அதற்கு ஏமாற்றம் தந்துவிட்டோமா... என்பதைப் பற்றி சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

– 50வது குடியரசு தினவிழாவில் குடியரசுத்தலைவர் கே.ஆர். நாராயணன்

சோ பிரதமராக வேண்டும்...! ஆசிரியரின் ஆசை...!

துக்ளக் 30ஆவது ஆண்டுவிழாவில் வாழ்த்திப் பேசிய ஆசிரியர் வி.என். சிதம்பரம் அவர்கள் தனது ஆசையை வெளியிட்டார். அவர் பேசியதாவது...

இந்த நாடு சீக்கிரமாக முன்னேறவேண்டும். என் காலத்திலேயே இந்தியாவை செழிப்பாகப் பார்க்கவேண்டும். நீங்கள் எழுதிக்கொண்டு வருவதெல்லாம் நடக்கிறது. வாஜ்பாய் நேர்மையான மனிதர், திறமையான பிரதமர், கார்கில் யுத்தம் போன்ற பிரச்சனைகளை சமாளித்து விட்டார். அவருக்கு கொஞ்சம் ஓய்வு வேண்டும். ஆறுமாதம் அவர் ஓய்வு பெற்று நீங்கள் இந்த நாட்டுக்கு பிரதமராக வரவேண்டும் என்பது எங்கள் ஆசை. ''நான் பிரதமராக வேண்டும் என்று வாஜ்பாயிடம் போய் கேளுங்கள் என்று சொல்கிறீர்களா" என்று நீங்கள் என்னைக் கேட்கலாம். நீங்கள் பிரதமராக வேண்டும் என்பது எங்களுடைய ஆசை. நீங்கள் ஒரு ஆறுமாதம் பிரதமராக இருந்து, இந்திய அரசை திறம்பட நடத்தி திரும்பவும் வாஜ்பாய் கையில் கொடுத்து, மீண்டும் நீங்களே அரசை நடத்துங்கள் என்று செய்தால், இந்த ஐந்து வருடத்தில் இந்தியாவை மிகச்செழிப்பாகப் பார்க்கலாம். இது என்னுடைய ஆசை.

இது நடக்குமா இல்லையா என்பது வேறு. ஆண்டவன் நினைத்தால் நடக்கும். நான் ஒன்பது ஆண்டுகாலம் மதுரை மீனாட்சியம்மன் கோயிலில் தொண்டு புரிந்தவன். இது நடக்கவேண்டும் என்பது என்னுடைய ஆசை. நான் உங்களைப் புகழ்வதாக நினைக்கக்கூடாது. இந்த ஆசையைச் சொல்லவேண்டும் என்றுதான் திக்குமுக்காடி, ஒவ்வொருவர் மீதும் விழுந்து விழுந்து கெஞ்சிக் கேட்டுக் கொண்டு இந்த மேடைக்கு நான் வந்திருக்கிறேன். இங்கே உள்ளே இருக்கும் கூட்டத்தைப் போல், வெளியில் மூன்று பங்கு கூட்டம் நிற்கிறது. அதையெல்லாம் தாண்டி வந்திருக்கிறேன். நான் கெஞ்சினேன். இதுவரையிலும் என்கிட்டேதான் டிக்கெட்டிற்கு கெஞ்சியிருக்கிறார்கள். நான் ஒரு கேள்வி கேட்கவேண்டும் என்று கெஞ்சினேன். ''நீ என்னய்யா கேட்கப்போறே?'' என்றார்கள். "நான் கேட்டதற்குப் பின் அவர் (சோ) அல்லவா சொல்லவேண்டும்" என்றேன். எப்படியோ வந்து என்னுடைய ஆசையைச் சொல்லி விட்டேன். இந்த நாட்டில் தைரியமாக எழுதுவது நீங்கள் ஒருவர்தான். "சார்! இவ்வளவு தைரியமாக எழுதுகிறீர்களே?" என்று நான் ஒருநாள் அவரை (சோவை)ப் பார்த்து கேட்டேன்.

"எனக்கு உயிர் மேல் ஆசை இல்லை" என்று அதற்கு அவர் காரணம் சொன்னார். எனக்கு உயிர் மேல் ஆசை இருந்ததால் அதோடு நான் வீட்டுக்குப் போய் விட்டேன். நன்றி.

சோ: நான் உங்களைப் பாராட்டுவதற்காகச் சொல்லவில்லை என்று சிதம்பரம் அவர்களே சொல்லிவிட்டார். நான் என்னை அவர் பாராட்டுவதாக நினைக்கவில்லை. ஏன் என்றால் எனக்கு அவர் எண்ணம் புரிகிறது. இவர் வாஜ்பாய் மீது நல்ல மரியாதை வைத்திருக்கிறார். நல்லவர், நேர்மையானவர், அறிவாளி, திறமைசாலி என்று எல்லாம் சொல்லி விட்டார். வாஜ்பாய்க்கு எப்படியாவது நல்ல பெயர் வரவேண்டும் என்பது இவருடைய ஆசை. அதற்கு என்ன செய்யலாம் என்று பார்த்தார். ஒரு ஆறுமாதம் சோ போன்ற ஆள் போய் உட்கார்ந்தால் அப்பொழுது வாஜ்பாயின் அருமை எல்லோருக்கும் தெரியும். "ஐயோ வாஜ்பாயே வரமாட்டாரா" என்ற குரல் நாடெங்கும் எழும். தான் வாஜ்பாய் மீது வைத்திருக்கும் அபிமானம் பரிபூரணமாகும் என்ற ஆசையில் அவர் பேசுகிறார். இவருடைய சதித்திட்டம் எனக்கு நன்றாகப் புரிகிறது. ஆகையால் அதற்கு நான் பலியாகப் போவதில்லை. வாஜ்பாய் அவராகவே முனைந்து நல்லபெயர் வாங்கட்டும்.

(கூட்டத்தினர் கரவொலியோடு சிரித்து மகிழ்ந்தனர்)

உலகின் இரண்டாவது கோடீஸ்வரரான இந்தியர்...

உலகின் மிகப்பெரிய கோடீஸ்வரரான அமெரிக்க கம்ப்யூட்டர் மன்னர் பில்கேட்ஸ் உலகின் நம்பர் ஒன் கோடீஸ்வரராக இருந்தார். அவருக்கு அடுத்தபடியாக இந்தியாவைச் சேர்ந்த விப்ரோ கம்ப்யூட்டர் கம்பெனியின் அதிபர் அசம் ஹரம் பிரேம் குரோதி என்பவர் உலகின் இதர கோடீஸ்வரர்களையெல்லாம் பின்தள்ளிவிட்டு உலகின் இரண்டாவது கோடீஸ்வரராக உயர்ந்திருக்கிறார். அவரின் விப்ரோ கம்பெனியின் பங்குசந்தையில் பங்குகளை வாங்கியும் விறபவர்களும் சுமார் 50 பேர் கோடீஸ்வரராக ஆகியிருக்கின்றனர். பிரேம்குரேஷியின் இன்றைய சொத்தின் மதிப்பு ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் கோடியைத் தாண்டியிருக்கிறது...

கோயில் விழாச் செய்திகள்

மிதிலைப்பட்டி அருள்மிகு ஸ்ரீ சிவயோகவல்லி அம்பாள் - ஸ்ரீ ஆவுடைநாதர் அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகவிழா 10-2-2000 அன்று சிறப்பாக நடைபெற்றது. குடமுழுக்கு விழாவில் குளித்தலை சுவாமிகள், கோயிலூர் தவத்திரு. நாச்சியப்ப ஞானதேசிகசுவாமிகள், ஆசிரியர் வி.என். சிதம்பரம் ஆகியோர் கலந்து கொண்டனர். மிதிலைப்பட்டி நகரத்தார் சிறப்பாக ஏற்பாடுகளைச் செய்திருந்தனர்.

இராமநாதபுரம் மாவட்டம் உத்திரகோசமங்கை அருகே வெள்ளாகிராமம் ஸ்ரீ பூர்ணம் ஸ்ரீபுஷ்பகரணி அம்பிகை சமேத ஸ்ரீமத் சித்த அய்யனார்சுவாமி ஆலய குடமுழுக்கு விழா 11-2-2000 அன்று சிறப்பாக நடைபெற்றது.

மதுரை ஸ்ரீ சீதாராம ஆஞ்சநேய மடாலயம் சார்பில் வேதபாடசாலை, புதிய கட்டடத்திறப்புவிழா மற்றும் சமஸ்கிருத வகுப்புகள் தொடக்கவிழாவும் 10-2-2000 அன்று சிறப்பாக நடைபெற்றது. விழாவிற்கு ஏ.ஜி.எஸ். ராம்பாபு, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தலைமையேற்றார். க.ரெ. மாதவாச்சாரி, ராணி சாரீஸ் ஆர்.எஸ். சாந்தாராம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கட்டடத்தினை ஆசிரியர் வி.என். சிதம்பரம் திறந்து வைத்தார்.

காணக்கிடைக்காத காட்சி...



தந்தை பெரியாரின் சீடராக கவியரசர்...



தமிழரசு கழகத்தலைவர் ம.பொ.சிவஞானம் அவர்களோடு கவியரசர்...

நானும் என் திராவிட இயக்க நினைவுகளும்...

(இராம. சுப்பையா சொல்ல சுப. வீரபாண்டியன் எழுதியது)

பர்மாவுக்குப் போய்த் திரும்பி வந்த அந்தக்காலம் வரைக்கும் அரசியல்லே எனக்கு எந்த ஈடுபாடும் இல்லே. அரசியலைப் பத்தின விஷயங்களே கூடத் தெரியாது.


திரும்பவும் ஊருக்கு வந்து சேர்ந்த சமயத்தில்தான் என் மனசுல ஒரு புது அலை வீசத் தொடங்குச்சு! அந்த அலை, என் மனசுல வீசக் காரணமாயிருந்தவரும், பின்னால என்னை முழுநேர அரசியல்வாதி ஆக்கியவரும் திரு. சொ. முருகப்பா அவர்கள் தான். அவருதான், எங்கேயோ திசை தடுமாறி நின்னுகிட்டிருந்த எனக்கு சரியான வழிகாட்டியா அமைஞ்ச அரசியல் குருன்னு சொல்லலாம். அவரு அப்போ தனவைசிய இளைஞர் சங்கம்னு காரைக்குடியில ஒரு சங்கம் வச்சிருந்தார். அந்தச் சங்கத்தின் மூலமா செட்டிநாட்டுலே உள்ள பல ஊர்களுக்கும் சென்று, பல சீர்திருத்தக் கருத்துக்களை அவரு சொல்லிகிட்டிருந்தாரு.. கல்யாணத்துக்கு வரதட்சணை வாங்குறதை ரொம்பக் கடுமையா எதிர்த்துப் பேசினாரு. பகுத்தறிவுக் கருத்துக்களை ஒத்துக்காத கணவனையோ மனைவியையோ வெட்டி விட்டுடலாம்கற அளவுக்குக்கூடத் தீவிரமாககப் பேசினவர் அவர். இதெல்லாம் அன்னிக்குச் செட்டிநாட்டையே ஒரு கலக்கு கலக்க ஆரம்பிச்சது. 'தனவைசிய ஊழியன்' அப்படின்னு ஒரு பத்திரிகையும் இவரு நடத்திகிட்டிருந்தார். சங்கத்தின் சார்பா, அரிமளத்தில் ஒரு கூட்டம் நடத்தினாங்க. திரு. சொ. முருகப்பா, பல சீர்த்தக் கருத்துக்களை, ரொம்ப ஆணித்தரமா அன்னிக்கு மீட்டிங்கிலே பேசினாரு. அதுதான் என் மனசில விழுந்த முதல் பொறி.

அவருகிட்டயும் ஒரு குணம் இருந்தது. எங்கயாவது கூட்டத்துப் போறப்போ உற்சாகமா இருக்கிற இளைஞர்களைப் பார்த்தார்னா விடவே மாட்டாரு. அந்த இளைஞனைப்பத்தி எல்லா விவரங்களையும் தெரிஞ்சுகிட்டு, கொஞ்சம் கொஞ்சமா தன் பக்கம் இழுத்திடுவார். அப்பிடித்தான் என் விஷயத்திலேயே நடந்தது. வேலைவெட்டி இல்லாம சும்மா திரிஞ்ச நான், அந்தச் சீர்திருத்தச் சங்க வேலைகள்லே ஈடுபட ஆரம்பிச்சேன். அது 1924, 25ஆம் வருஷமா இருக்கலாம்.

நான் பொறந்தது ரொம்பச் சாதாரணக் குடும்பத்திலதான். அந்த மாதிரிக் குடும்பத்துல பொறந்த பையன்களை, பணக்கார வீடுகளுக்கு, சுவீகார (தத்து) செய்து கொடுத்து விடுவது, செட்டிநாட்டுல சகஜமா இருந்து வந்த பழக்கம். பிள்ளைகளை விலைக்கு விற்கிற மாதிரியான பழக்கம்தான் இது. .பிறந்த இடத்துக்கும், போகிற இடத்துக்கும் தகுந்த மாதிரி, இந்த விலை பத்தாயிரம், இருபதாயிரம் என்று மாறும்.

இதுமாதிரி, என்னையும் சுவீகாரம் செய்து குடுப்பதற்கான பேச்சு வார்த்தைகள் நடந்துச்சு. இதைத் தெரிஞ்சுகிட்ட சொ.முருகப்பா, என்னைத் தன்னோட மாமனார் வீட்டுக்கே 'பிள்ளை கூட்ட' ஏற்பாடு செய்ஞ்சார். அந்த வீட்டுலே மூணு பெண்கள். பையனே இல்லே. அவரோட முயற்சி வெற்றியாகி, 1926, 27-இல், நான் அங்கே சுவீகாரம் போனதுமூலம், நான் அவரோட மச்சினன் ஆயிட்டேன். சுவீகாரம் போன எடத்துலே, என்னோட அக்கா பொற்கொடி ஆச்சியத்தான், அவரு கல்யாணம் செஞ்சுகிட்டிருந்தாரு.

சுவீகாரம்ங்கிறது, ஒரு வித்தியாசமான விஷயம். சுவீகாரம் போனவங்களுக்குத் தான், அன்னிக்கு தினத்தல, மனசு எப்பிடி



இருக்கும்னு தெரியும்.

சுவீகார வீட்லேயிருந்து வந்த சட்டைகளையெல்லாம் போட்டு, கழுத்து, கைக்கெல்லாம் சங்கிலி மாட்டி, புது வீட்டுக்குக் கூட்டிட்டுப் போவாங்க. அந்த நிமிஷத்தோட, பொறந்த ஊரோடயும், பொறந்த வீட்டோடயும் எல்லா உறவும் விட்டுப் போயிடும். அதுக்கப்புறம், புதுவீட்ல இருக்கிறவங்கதான், அப்பா, அம்மா எல்லா உறவும்.

பொறந்த வீட்ல வைச்ச பேரைக்கூட, புது வீட்ல மாத்திடுவாங்க. அதேமாதிரி, என்னோட சுப்பையாங்கிற பேரையும், முத்துராமன்னு மாத்திட்டாங்க. இன்னிக்கும் எல்லா ரெக்கார்டுலேயும் என்னோட பேரு அழ.சா.ராம.மு.ராம. முத்துராமன் (சுவீகாரம் எடுத்துக் கொண்ட அப்பாவின் பெயர் ராமசாமி) அப்பிடின்னுதான் இருக்கு. ஆனா, வழக்கத்துக்கு மாறா, என்னோட பேரு வழக்கில 'சுப்பையா' ன்னே நிலைச்சுப் போச்சு. அதுலயும் இன்னொரு வேடிக்கை என்னன்னா பழ. சுப்பையான்னோ, இராம. முத்துராமன்னோ இல்லாம,' சுவீகார வீட்டு இன்ஷியலும், பொறந்த வீட்டுப் பேருமா, என்னை 'இராம. சுப்பையா'ன்னாத்தான் எல்லோருக்கும் தெரியும். கையெழுத்தும் நான் அப்பிடித்தான் போடறேன்.

சுவீகாரம் வரும் பையனுக்கு, பெரும்பாலும், சொந்தத்திலேயே முறைப்பொண்ணு இருக்கும். சீக்கிரம் கல்யாணமும் செஞ்சிடுவாங்க. எனக்கும், சுவீகாரம் வந்த மூணு, நாலு வருஷத்துக்குள்ளே கல்யாணம் ஆயிடுச்சு. எனக்கும், சண்முகநாதபுரம் (ஆராவயல்) சாமிநாதன் செட்டியார் பொண்ணு விசாலாட்சிக்கும் விபவ வருஷம் மாசி மாதம் கல்யாணம் நடந்திச்சு. (1928 மே மாதம்) கல்யாணம் வைதீக முறைப்படிதான் நடந்திச்சு. பெரியாரோட எல்லாம் தொடர்பு வராததால, நான் வைதீக முறைக் கல்யாணத்தை எதிர்க்கலே. சொ. முருகப்பாவும் தன் மாமனார் வீட்டுலே அதிகம் தலையிட முடியல. ஆகையினாலே, வழக்கமான செட்டி நாட்டுக் கல்யாணங்கள் மாதிரியே, வைதீகமாவும், தடபுடலாகவும் எங்க கல்யாணம் நடந்து முடிஞ்சிச்சு!

- வளரும்

இதயநோயா...? என்னிடம் வாருங்கள்...!

மருத்துவப்பகுதி

இதய அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர். நரேஷ்குமார்



என் அப்பாவுக்கு நெஞ்சுவலி வந்தபோது அம்மா ரொம்பவும பயந்து போய் ஒரு பிரைவேட் நர்சிங்ஹோமில் அவரைச் சேர்த்தாள். ரியாத் நகரில் இருந்த எனக்கு உடனே போனும் பண்ணினாள். "அம்மா, டாக்டர் சொல்கிறபடி செய். எல்லாம் சரியாகிவிடும். பயப்படாதே" என்று போனில் ஆறுதல் சொன்னேன்.

"மறுநாள், அப்பாவின் இதய இயக்கத்தைப் பதிவு செய்து காண்பிக்கும் மானிட்டரைப் பார்த்து அம்மா பயந்துபோய், நர்சைக் கூப்பிட்டு, சிஸ்டர், மானிட்டரைப் பாருங்கள். கோடுகள் சரியாகவே இல்லையே, ரொம்பவும் மேலேயும் கீழேயும் போகிறதே!" என்று சொல்லியிருக்கிறாள். "அது ஒண்ணுமில்லே. அந்த மானிட்டர் ஒர்க் பண்ணலேம்மா. நீங்க பயப்படாதீங்க" என்று பதில் சொல்லிவிட்டு நகர்ந்து விட்டாள் நர்ஸ்.

"பணத்தை மட்டும் வாங்கிக்கொண்டு வேலை செய்யாத கருவிகளை வெறுமனே ஷோ பீஸ்களாக வைத்து, இதய நோயாளியின் உண்மையான நிலைமை அறிய முடியாமல் செய்த அந்தச் சம்பவத்தை அம்மா என்னிடம் போனில் சொன்னபோது, ஆத்திரமாக வந்தது..."

– கோபப்பட்டவர் ***சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள ஹார்வி ஹார்ட் ஹாஸ்பிடல்ஸின் நிர்வாக இயக்குநர், டாக்டர். நரேஷ்குமார்.***

27 வயதிலேயே ஹார்ட் ஸ்பெஷலிஸ்ட் ஆனவர். ஹேர்ஃபீல்ட் ஹாஸ்பிடல் என்பது லண்டனில் உள்ள மிகப்பெரிய, இதயநோய்ச் சிகிச்சைக்கான மருத்துவமனை. உலகிலேயே அதிக அளவு ஹார்ட் டிரான்ஸ்பிளான்ட் செய்கிற மருத்துவமனை என்று புகழ் பெற்றது. அஙகே சுமார் ஏழு வருடம் ஹார்ட் சர்ஜனாக இருந்திருக்கிறார் நரேஷ்குமார். அப்புறம் எல்லா இளம் டாக்டர்களையும் போல மத்திய கிழக்கு, தூரக்கிழக்கு நாடுகளுக்குப் போய்ச் சம்பாதிக்கும் எண்ணம் தோன்றியது. எனவே, ரியாத் நகரில் உள்ள கிங் ஃபசல் ஸ்பெஷாலிடி ஹாஸ்பிடலில், கார்டியாக் சர்ஜனாக சுமார் ஒன்பது வருஷத்துக்கு மேல், வேலை பார்த்திருக்கிறார். சுமார் 10,000 ஆபரேசனுக்கு மேல் செய்திருக்கிறார் அனுபவசாலி நரேஷ்குமார்.

"சரி, அங்கேதான் நிறைய பணம் வருகிறது. இங்கே திரும்பி வந்து இப்படி ஒரு ஹாஸ்பிடல் (சுமார் இருபது கோடி செலவில்) திறக்க என்ன காரணம்?"

"முன்னே எல்லாம், அதாவது சுமார் இருபது வருடங்களுக்கு முன்னால், ஜி.ஹெச்.சில்தான் எல்லாரும் போய் அறுவை சிகிச்சை செய்து கொள்ளுவார்கள் வசதியானவர்கள் உட்பட. பணச்செலவும் அதிகமில்லை. நல்ல ஸ்பெஷலிஸ்ட்டுகளும் அங்கேதான் இருந்தார்கள். தனியார் மருத்துவமனைக்குத் தைரியமாகப் போய், சிகிச்சை பெறுவதோடு, பணமும் செலவழிக்கத் தயங்கினார்கள். இப்போது காலம் மாறிவிட்டது. எவ்வளவானாலும் செலவழித்து, நல்ல சிகிச்சை பெற்று, ஆரோக்கியமாக இருப்பது முக்கியம் என்ற மனநிலை வந்திருக்கிறது. நோயாளி பணம் செலவழிக்கத் தயாராய் இருக்கும்போது,



செயல்படக்கூடிய, நவீன கருவிகளை வைத்திருந்தால்தானே தகுந்த சிகிச்சை அளிக்கமுடியும்?"

"தென்கிழக்கு ஆசியாவிலேயே இரண்டே இரண்டு இடங்களில்தான் இந்த மூன்றுகோடி ரூபாய் இயந்திரம் இருக்கிறது" என்று 'கோரஸ்கோப் டாப்' எனும் சீமன்ஸ் இயந்திரத்தைக் காண்பித்தார் டாக்டர். ஹைகார் கம்ப்யூடர்களும், காம்பாக்ட் டிஸ்க் எனப்படும் ஸிடி-க்களுமாக அந்த அறை அமர்க்களமாக இருந்தது.

"பழைய முறைப்படி ஃபிலிம் பயன் இல்லை. லேசரில் ஸி-டியில் நிறையப் பதிவு செய்து கொள்ளமுடியும். விலை குறைவு. டிஜிடல் முறையாதலால் துல்லியமாக இருக்கும். உலகின் எந்த மூலைக்கும் கொண்டுபோய் ரீப்ளே செய்து பார்க்க முடியும். இன்னும் இரண்டு மாதங்களில் எங்கள் வீடுகளில் உள்ள கம்ப்யூட்டர்களுடன் இங்கே இணைப்புத் தரப் போகிறோம். எமர்ஜென்சி என்றால் உடனே எங்கள் வீட்டு கம்ப்யூட்டர் திரைகளில் உடனே பார்த்துவிட்டுச் சிகிக்சையைத் தாமதம் இல்லாமல் தொடங்கி விடலாம். அதுதான் லேபரடரியின் அனுகூலம்!"

"ஆமாம், எல்லாம் அதிநவீனம் என்று சொல்லி இன்னும் கொஞ்சம் கூடவே சார்ஜ் செய்யலாம்!"

"அதுதான் கிடையாது. மற்ற இடங்களில் ஹார்ட் சர்ஜரி, ஆஞ்சியோபிளாஸ்டிக்கு ஆகிற செலவைவிட இருபது சதவிகிதம் குறைவாகவே ஆகும்!" என்று அடித்துச் சொன்னார் டாக்டர் நரேஷ்குமார்.

கம்ப்யூட்டரின் குமிழை அழுத்தி, அதில் பேஷண்டுகளின் பெயர்கள் உயிர் பெற்றவுடன், இன்னொரு குமிழை அப்படியும் இப்படியுமாக அசைக்க -

சாருஹாசனின் இதயம் கம்ப்யூட்டர் திரையில் வந்தது. குணமாகி வீட்டுக்குப் போய் விட்டாராம்.

மலர் மருத்துவமனையில் பணியாற்றி விட்டு, இப்போது இங்கே வந்திருக்கும் நிபுணர் டாக்டர் சிவகடாட்சம், அனஸ்தீஸியாவில் எக்ஸ்பர்ட் என்று சொலலப்படும் டாக்டர் ரத்தன்ராஜ், டாக்டர் மிருணாளினி நரேஷ்குமார் எல்லாருமே அனுபவசாலிகள். அதிலும் டாக்டர் மிருணாளினி, நோயாளியின் பழுதுபட்ட இதய வால்வுகளை மாற்றுவதில் ஒரு புதிய உத்தியை இங்கு அறிமுகப் படுத்தியிருக்கிறார்.

"கடவுள் நம் இதயத்துக்கு மூடி மாதிரி, பெரிகார்டியம் என்கிற டிஸ்யூவை, (ஜவ்வு) கொடுத்திருக்கிறார். பழுதுபட்ட இந்த ஜவ்வை நோயாளியிடமிருந்தே எடுத்து, பழுதுபட்ட வால்வுக்கு மாற்றுச் செய்து பொருத்தும் முறையைக் கையாள்கிறார் டாக்டர் மிருணாளினி! இதனால் செயற்கை வால்வுகளுக்கு ஆகக்கூடியதைவிட முப்பது சதவிகிதம் செலவு குறைகிறதாம்"

"டாக்டர், இந்த ஏழைகளுக்கும் இதயம் இருக்கு இல்லையா? அவர்களுக்கு ஏதேனும்..."




"வசதி உள்ளவர்கள் ஒரு லட்சமோ, ஒண்ணேகால் லட்சமோ கொடுத்து, சிகிச்சை செய்து கொள்கிறார்கள். மிடில் கிளாஸ் மக்கள் பாவம்தான்! மகன் உதவமாட்டேன் என்பான். அம்மா அழுவாள். இப்போதைக்கு ஏதேனும் மருந்து கொடுங்கள் டாக்டர். நாலஞ்சு வருஷம் தாங்கினால் போதும். 'டாட்டர் மேரேஜ்' முடிச்சுடுவேன். இல்லேன்னா விட்டுடுங்க. வீட்டுல போய்ச் செத்துடறேன்" என்று அப்பட்டமாகச் சொல்லுகிற அப்பாக்களையும் பார்க்கிறேன். டிஸ்போசபிள் உபகரணங்களுக்கு மட்டும் பணத்தை வாங்கிக் கொண்டு, டாக்டர்கள் இலவசமாகச் சிகிச்சை அளிக்க, மீதியை சாரிடபிள் டிரஸ்ட் மூலமாக உதவும் திட்டம் இருக்கிறது. 'ஹேவ் அ ஹார்ட் ஃபவுண்டேசன்' என்று தொடங்க இருக்கிறோம். இது தவிர 15,000 ரூபாயை ஒரே ஒருமுறை செலுத்திவிட்டால், வருடா வருடம் தரோ செக்-அப்பும், ஹார்ட் பிராப்ளம் இருக்கிற பட்சத்தில் தொடர்ந்து இலவச சிகிச்சையும் அளிக்க இருக்கிறோம். கம்பெனிகள் தங்கள் அதிகாரிகளை இந்தத் திட்டத்தில் எங்களிடம் அனுப்புமானால் ரூ. 25,000 கட்டணமாகும்" என்றார்.

ஐயப்பன் தத்துவங்கள்...

நமது ஆசிரியர் எழுதிய ஸ்ரீ ஐயப்பன் தத்துவங்கள் என்ற நூலுக்கு "ஆன்மீகம்" மாத இதழில் வழங்கிய மதிப்புரை...

"தத்துவம் என்றால் உட்பொருள்" என்று தொடங்கியிருக்கும் ஆசிரியர், நம்மால் "இதைச் செய்ய இயலுமா? அதைச் செய்ய இயலுமா?" என்று எண்ணுபவர்களும் விரதத்தை மேற்கொண்டுவிட்டால் "எதையும் செய்ய இயலும்" என்னும் உறுதிக்கு வந்து விடுகிறார்கள் என்று மாலை அணிபவர்களுக்கு மனதில் தைரியம் ஏற்படுத்துவதோடு, கட்டுப்பாடு, விரதமகிமை, சீருடையின் சிறப்பு, அறிமுகமின்றி நிகழும் அற்புதங்கள், அன்னதானத்தின் அருமை, அன்பின் பெருமை, குருபக்தியின் பெருமை, இருமுடியின் இணையற்ற தத்துவம், மதத்தைக் கடந்த மாணிக்கதெய்வம், பொன் செய்யும் மருந்து ஐயப்பன் என்றால் அருள்புரிவார், குழந்தையும், தெய்வமும், துன்பத்தை துடைக்கும் தூயவன் இறைவனே, பேசாத பிள்ளை பேசியது, ஆபத்தில் உதவும் அண்ணல், பாவ மன்னிப்பு, வரன்முறைக்கு ஒரு தர்மசாஸ்தா, மானிடப்பிறவியின் மகிமை, அற்புதக்குழந்தை பிறந்தது, மகிமை மிகுந்த மணிகண்டன், நிகரற்ற நெறிமுறைகள், பால் மனம் பழுதானது, அன்பும் ஆசியும், புகழ் மணக்கும் பொன்னம்பலங்கள், மகிஷி அழிந்தாள், மும்மூர்த்திகளின் அன்பு, தலைவலி நீக்கப் புலிப்பால், அகஸ்தியர் போற்றிய அருமை மைந்தன், ஐயனின் திருவடி, கடந்தவன் நம்மைக் காப்பவன், முத்தான மூன்று பாதைகள், கோமாதா தரும் நெய்யில் குளிக்கின்ற பெருந்தெய்வம் போன்ற தலைப்புக்களில் அரிய பல தெளிய குறிப்புக்களைக் கூறியுள்ளார். உண்மையில் ஒவ்வொரு ஐயப்பபக்தர்கள் வீட்டுப் பூஜையறையிலும் கண்டிப்பாக இடம் பெற வேண்டிய நூல் என்றால் அது மிகையாகாது.

ஆசிரியர்: வி.என். சிதம்பரம். விலை ரூ. 20. கிடைக்குமிடம்: வானதி பதிப்பகம்.



வாங்க ஆச்சி... சமைக்கலாம்!

விசாலாட்சி, சென்னை

கதம்ப வடை

தேவையான பொருட்கள்:

துவரம்பருப்பு	200 கிராம்	கடலைப்பருப்பு	100 கிராம்
உளுந்தம்பருப்பு	75 கிராம்	பச்சரிசி	50 கிராம்
மிளகாய் வற்றல்	10	முந்திரிப்பருப்பு	10
தேங்காய் துருவல்	சிறிதளவு	உப்பு	தேவையான அளவு
எண்ணெய்	கால் கிலோ		

செய்முறை:

எல்லா பருப்புகளையும் ஊறவைத்து உப்பு, காய்ந்த மிளகாய் சேர்த்து அதிகம் தண்ணீர் சேர்க்காமல் ஆட்டிக் கொள்ளவும்.

ஆட்டிய மாவுடன் தேங்காய்துருவல், கறிவேப்பிலை சேர்த்து பிசைந்து கொள்ளவும். வாணலியில் எண்ணெயைக் காயவைத்து, வடைகளைத் தட்டிப் போட்டு பொன்னிறமாகப் பொரித்து எடுக்கவும்.

வாழைத்தண்டு வடை

தேவையான பொருட்கள்:

வாழைத்தண்டு	1 துண்டு	கடலைப்பருப்பு	அரை ஆழாக்கு
பொட்டுக்கடலை	அரை ஆழாக்கு	தேங்காய்த்துருவல்	2 மேஜைக்கரண்டி
வெங்காயம்	1	சோம்பு	1 தேக்கரண்டி
சீரகம்	1 தேக்கரண்டி	காய்ந்த மிளகாய்	8
கருவேப்பிலை	சிறிதளவு	உப்பு	தேவையான அளவு
எண்ணெய்	கால்கிலோ		

செய்முறை:

வாழைத்தண்டை நைசாக நறுக்கி மோர்த்தண்ணீரில் போடவும். பொட்டுக்கடலையை மிக்சியில் நைசாக பொடி செய்து கொள்ளவும். கடலைப்பருப்பை அரைமணிநேரம் ஊறவைக்கவும். தேங்காய்த்துருவல், சோம்பு, சீரகம் எல்லாவற்றையும் நைசாக அரைத்து கடைசியில் கடலைப்பருப்பை வைத்து ஒன்றிரண்டாக அரைத்துக் கொள்ளவும். வெங்காயம், கருவேப்பிலையை நைசாக நறுக்கிக் கொள்ளவும். அரைத்த கலவை, பொட்டுக்கடலை மா, வெங்காயம், வாழைத்தண்டை தண்ணீர் இல்லாமல் பிழிந்து, எல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்து பிசைந்து கொள்ளவும்.

தோசைக்கல்லை அடுப்பில் வைத்து சிறுவடையாக தட்டி இருபுறம் எண்ணெய் ஊற்றி சிவக்க வேகவிட்டு எடுக்கவும். வாணெலியில் எண்ணெயைக் காயவைத்து வடைகளைப் பொரித்தும் எடுக்கலாம்.

குறிப்பு: புடலங்காய், வாழைப்பூ, முள்ளங்கி, பீட்ரூட் ஆகியவைகளிலும் செய்யலாம்.

அடுத்த இதழில்...

வள்ளியம்மையின் வீரம்...

இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்று இன்னுயிரீந்தவர்கள், ஆங்கிலேயரை விரட்டி அதில் விழுப்புண் பெற்றவர்கள் எல்லாம் வரலாற்றுப் பக்கங்களில் வாழ்ந்து கொண்டிருந்தாலும், வீராங்கனையாக வரலாற்றில் வாழ்ந்து கொண்டிருப்பவர் தில்லையாடி வள்ளியம்மையார்.

ஒருமுறை ஆங்கிலேயர்கள் போராட்டத்தில் கலந்து கொண்டிருந்த இந்தியர்களைப் பார்த்து "இந்தியா... இந்தியா... இந்தியா... தேசமே... இந்தியா என்கிறீர்களே! எல்லா தேசத்திற்கும் தேசியக்கொடி என்று ஒன்று உண்டு. உங்கள் தேசத்திற்கு என்று தேசியக்கொடி ஒன்று உண்டா...?" என்று கேலி செய்தபோது அருகே நின்று கொண்டிருந்த தில்லையாடி வள்ளியம்மை வெகுண்டெழுந்து, வெள்ளையர்களைப் பார்த்து, "தான் உடுத்தியிருந்த சேலையின் முந்தானையைக் கிழித்து இதுவே என் தேசியக்கொடி" என்றாராம். அந்த சேலையில் இருந்த மூன்று வண்ணங்களே பிற்காலத்தில் தேசியக்கொடியாயிற்று...

- நாகேஷ்

அச்சம் அறியாமையிலிருந்துதான் எப்போதும் பிறக்கிறது. எனவே அறியாமையை முதலில் நீக்க வேண்டும் **- எமர்சன்**

துறவும் தொண்டுள்ளமும் இரு கண்கள் **- வீரதுறவி விவேகானந்தர்**

வயது ஆக ஆக முடி கொட்டுவது போல் நாக்கும் கழன்றுவிட்டால் நாட்டில் பிரச்சனைகளே இருக்காது. **- கவியரசர் கண்ணதாசன்.**

உலகில் இந்தியா முதலிடம்...

உலகில் பால் உற்பத்தியை அதிகரித்து இந்தியா முதலிடம் வகிக்கின்றது. முட்டைகள் உற்பத்தியில் ஐந்தாவது இடத்தையும், மீன்கள் உற்பத்தியில் ஆறாவது இடத்தையும், உள்நாட்டு மீன்கள் உற்பத்தியில் இரண்டாவது இடத்தையும் வகிப்பதாக 1999ஆம் ஆண்டிற்கான வேளாண்மை அமைச்சகத்தின் ஆய்வு தெரிவிக்கின்றது. 1998-99ஆம் ஆண்டில் 747 லட்சம் டன் பால் உற்பத்தி செய்யப்பட்டது. நடப்பாண்டில் அது 781 லட்சம் டன்னை அடையுமென எதிர் பார்க்கப்படுகிறது. முட்டைகள் உற்பத்தியிலும் 3020 கோடியில் இருந்து 3132 கோடியை எட்டுமென எதிர்பார்க்கப் படுகிறது. நடப்பாண்டில் மீன் உற்பத்தி 56 லட்சம் டன்னை எட்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. இது கடந்த ஆண்டை விட மூன்று இலட்சம் டன் அதிகமாகும். அதிகமான கால்நடைகளைப் பணிக்குப் பயன்படுத்துவதாலும், அதனால் வறுமை குறைக்கப்படுவதுடன் குடும்ப வருமானமும் அதிகரிப்பதால் அடுத்த நூற்றாண்டில் கால்நடை வளர்ப்புத்துறை முக்கியத்துவம் பெறுகிறது.

ஒருங்கிணைந்த பால் உற்பத்தித் திட்டத்தின் கீழ் மலைப்பிரதேசங்கள் மற்றும் பின்தங்கிய பகுதிகள் முன்னேற்றத்திற்காக நாட்டில் 20 மாநிலங்களில் 112 மாவட்டங்களில் 6646 பால் கூட்டுறவு மையங்கள் நிறுவப்பட்டுள்ளன.

- நன்றி இந்தியஅரசு பத்திரிகை தகவல் மையம், மதுரை

திருக்குறள் வ(ல)ளம்...!

காண்டுகர்த்தான் திரு. சொக்கலிங்கம், ஈரோடு.

1. அடுத்தவனது அறிவு, ஆற்றல், பணம், செல்வாக்கு முதலியவற்றை பற்றி பொறாமைப்படுவது.
2. அவனது முன்னேற்றம் குறைந்து, கீழ்நிலைக்கு செல்லவேணும் என நினைப்பது.
3. அடுத்தவருக்கு, அவனது வாழ்வில், செயலில், நடைமுறைக்கு எந்த வழியிலாவது இடைஞ்சலும், தீங்கும் செய்தல் முதலியன

குறள்: **அழுக்காறு அவா, வெகுளி இன்னாச் சொல் நான்கும்**
இழுக்கா இயன்றது அறம்.


பொருள்: பொறாமையும், ஆசையும், கோபமும், கடுஞ்சொல்லும் ஆகிய நான்கும் இல்லாது நடப்பதுதான் அறம். அதுவே அறம் செய்வதற்கு இந்த நான்கு குணங்களும் இல்லாது இருக்கவேண்டும். இவைகள் இருந்தாலும் எளிதில் நீக்கிக் கொள்ளவேண்டும்.

- வரும்

கோயிலில் தேங்காயை உடைப்பதேன்...?

தேங்காய் என்பது மனித உடலைப் பிரதிபலிக்கிறது. வெளியே பளபளப்பான மேல்தோலையும், உள்ளே பிசிறு பிடித்த நார்ப்பகுதியையும், தேங்காய் கொண்டிருக்கிறது. தேங்காய் நாரை உரித்த பிறகே கோயிலுக்கு எடுத்துச் செல்கிறோம். தேங்காயின் ஓடு பிரபஞ்சத்தை ஒத்திருக்கிறது. உள்ளே உள்ள வெண்ணிறமான பகுதி பரமாத்மாவைக் குறிக்கிறது. இளநீர் பரமாத்வால் விளையும் பரமானந்த அமிர்தத்தை ஒத்திருக்கிறது. வெள்ளைப் பகுதியையும், இளநீரையும் காணமுடியாமல் ஓடு மறைக்கிறது. இறைவன் சந்நிதியில் மாயை அகற்றி ஒளிமயமான உருவத்தைக் காட்டி பரமானந்தப் பேரமுதத்தை நுகரச் செய்யும் செயலை இது காட்டுகிறது.

உலகம் வசமாகும்



ஒரு செடியிடம்
உன்னை விரும்புகிறேன்
என்று சொல்லுங்கள்
ஒரு நொடிக்குள்
அது மகிழ்வாய் பூவைத்தரும்...!

ஒரு சிப்பியிடம்
உன்னை ஆராதிக்கிறேன்
என்று சொல்லுங்கள்
ஒரு நொடிக்குள்
அது உவகையாய் முத்தைத் தரும்...!

உலக உயிர் அனைத்தையும்
யான் யாசிக்கிறேன்
பூஜிக்கிறேன், நேசிக்கிறேன்
என்று சொல்லுங்கள்...
இந்த உலகமே இனி
உங்கள் வசம் தான்...!

- எம். ஜானகி
காரைக்குடி

அரியக்குடிக்கு தேடிவந்த வெங்கடேசப்பெருமாள்

ஓர் இருநூறு ஆண்டு காலத்திற்கு முன் திருப்பதி வெங்கடேசப்பெருமாள் நடத்திய பக்தி விளையாட்டைப் பார்ப்போமா...?

காரைக்குடிக்கு அருகே அரியக்குடி. அங்கே அரண்மனை போன்ற ஒரு பங்களாவில் சேவுகன் செட்டியார் என்பவர் ஏழுமலை வெங்கடேசப்பெருமானை வேண்டி ஓம் நமோ நாராயணாய என்ற நாமத்தை பிரார்த்தனை செய்து தன் வீட்டு வாசலில் பெரிய உண்டியலை வைத்தார். அந்தக் கிராமத்து மக்களெல்லாம் தங்களா"ல் இயன்ற பொருள்களையும், பணத்தையும் உண்டியலில் இடுவர். பெரும் செல்வந்தரான சேவுகன் செட்டியாரும் தனது பங்கிற்கு தங்கம், வெள்ளி நகைகளையும், பணத்தயும் செலுத்தி அந்த உண்டியலை தலையில் சுமந்துகொண்டு பாதயாத்திரையாகவே 500 கி.மீ. நடந்து சென்று திருப்பதி வெங்கடேசப்பெருமானுக்கு காணிக்கை செலுத்துவாராம்.

இந்த வழக்கத்தை ஆண்டுதோறும் தனது பழக்கமாகத் தொடர்ந்து பாத-யாத்திரையாகவே சென்று செலுத்தி வந்திருக்கிறார்.

நாளாக... நாளாக... வயதும், இளமையும் கடந்துபோக முதுமையைத் தொட்ட சேவுகன் செட்டியாரால் பாதயாத்திரையாக நெடும் பயணம் செல்வதற்கு உடல் ஒத்துழைப்புத் தரவில்லையென்றாலும் அவரின் உள்ளம் வெங்கடேசப்பெருமாளிடமே இருந்தது.

உறவினரும், நண்பர்களும் பாதயாத்திரை வேண்டாம், ஏதாவது வாகனத்தில் சென்று காணிக்கையினைச் செலுத்தலாமே என்று அறிவுரை கூற, ஏற்க மறுத்த சேவுகன் செட்டியார் தள்ளாத வயதிலும், தளராத உள்ளத்தோடு காணிக்கை உண்டியலை தலையில் சுமந்தவாறே மலைப்படிகளில் ஏறத் துவங்கினார். திடீரென்று மலைப்படிகளில் மயங்கி விழுந்தார். உடன் வந்தவர்கள் அவரின் மயக்கத்தை நீக்க முயற்சிக்க... மயங்கியவரின் மனதில் நுழைந்தார் வெங்கடாசலபதி.

"சேவுகனே! இந்தத் தள்ளாத வயதிலும் நீ என்னைப் பார்க்க இப்படி பாத யாத்திரையாகத்தான் வரவேண்டுமா? உன் பக்தியின் தவத்தைக் கண்டு மெச்சினேன். இனி நீ இருக்கும் இடத்திற்கே நான் வருகிறேன். நீ ஊருக்குத் திரும்பும்போது உன் ஊரில் ஓர் இடத்தில் நான்குபக்கமும் முளை அடித்து நடுவில் உடைத்த தேங்காயும் குங்குமமும் இருக்கும். அந்த இடத்தில் நானிருப்பேன். நீ அங்கேயே என்னை வழிபடலாம்" என்று கனவு களைய மூர்ச்சை தெளிந்தார் சேவுகன் செட்டியார்.

அரியக்குடிக்கு திரும்புகையில் கனவில் வெங்கடாசலபதி சொன்னதுபோலவே எல்லாம் அந்த இடத்தில் இருக்க பரவசம் கொண்ட சேவுகன் செட்டியார் அங்கேயே ஆலயம் எழுப்ப முயற்சி மேற்கொண்டார். ஸ்ரீரங்கம் கோயிலிருந்து ராமானுஜரால் ஆராதிக்கப்பெற்ற நம்பெருமாள் விக்கிரகம் பூக்குடலையில் அரியக்குடிக்கு கொண்டு வந்து பிரதிஷ்டை செய்யப்பெற்றது. திருப்பதியிலிருந்து சடாரி வந்தது. திருமயத்திலிருந்து அக்னி கொண்டு வரப்பெற்றது. ஆலயம் எழும்பலாயிற்று. அரியக்குடி திருவேங்கடமுடையான் என நாமம் வழங்கலாயிற்று. நம் நகரத்தாரின் பெரும் முயற்சியால் கட்டி முடிக்கப்பெற்ற அரியக்குடி திருவேங்கடமுடையானைத் தரிசித்தால் ஏழுமலை வெங்கடாசலபதி பெருமாளைத் தரிசித்த புண்ணியம் கிடைக்குமென்று பக்தர்கள் கூட்டம் அலைகடலென கூடுகிறது. பக்தர்களுக்கு அரியக்குடி பெருமானின் அருள் பாலித்து வருகிறார். அரியக்குடி பெருமானின் வரலாறு பக்தர்களுக்கு ஒரு பரவசம் தானே...!

எழிலான சரித்திரமே!

(கவிதாஞ்சலி)

கரம்கூப்பி வணங்கி
வரம்தந்த வள்ளலே!
சிரம்தாழ்த்தி வணங்கி
சிந்தை மகிழ்ந்திருந்தோமே!
உரம் தந்து
மண்ணை உயர்த்திவிட்டு
எங்கு சென்றாய்!

கம்பீரத் தோற்றத்தினுள்
கனிவான இதயங்கொண்டிருந்த
அன்பின் அரிச்சுவடியே!

இதயக் கிணற்றிலிருந்து
நீ வார்த்திட்ட
இரக்க எண்ணெயால்
இன்று
லட்சோப லட்ச இல்லங்களில்
ஒளிவிளக்குகள்!

உளம் தொட்டு
உலகாண்ட மன்னவனின்
கலை ரசித்த
அபிராமி அன்னையின்
திருமுகத்தில்
சோகச் சுவடுகள்!

சிங்கமென
வாழ்ந்து காட்டிய
செட்டி நாட்டுத் தங்கமே!

அடையாறு மாளிகைத் தோட்டத்தில்
அழகான அந்தப் பூக்கள்
நின் முகம் பார்க்க
நம்பிக்கை தளராமல்
நாளும் பூத்துவருகையில்.

உதக மண்டலத்தில்
வசந்த காலக்காற்று
அடுத்த முறை வந்து
தேடி அலைகையில்.



Dr. M.A. சிதம்பரம்

சேப்பாக்க
விளையாட்டு மைதானத்தினுள்
அடுத்த முறை வந்து
தேடி அலைகையில்.
சேப்பாக்க
விளையாட்டு மைதானத்தினுள்
அடுத்து நுழையும்போது
எங்கள் கால்கள் தடுமாறுகையில்.

உலகெலாம் தொழில்வளர்த்த
உத்தமரின் ஓர் இருக்கைமட்டும்
அந்த வான ஊர்தியில்
வெறிச்சோடி எமைப்பார்க்கையில்.
தமிழிசைச் சங்கத்தின்
அடுத்த ஆண்டுவிழாவில்
தமிழன்னை நின்னைக்காணாது
தவித்து நிற்கையில்.

தில்லை நடராசரிடத்தில்.
திருக்கடையூர் அபிராமியிடத்தில்.
தெய்வாலயங்கள் பலவற்றில்.

என்ன சொல்வோம் - நாங்கள்
எப்படிச் சொல்வோம்
எழிலான சரித்திரமே!


- சி. வேல்முருகன், மேனேஜர்.
சௌத் இந்தியா கார்ப்பரேசன் (ஏ) லிட்.
(மார்க்கெட்டிங்). திருச்சி.

குடவரைக்கோயில் பிள்ளையார்



பிள்ளையார்பட்டி, திருப்பரங்குன்றம் போன்ற குறிப்பிட்ட ஆலயங்களில் தான் குடவரைச் சிற்பங்கள் உள்ளன குன்றக்குடியில் இருக்கும் இந்தக் குடவரைப்பிள்ளையார் தொல்பொருள்துறையின் பராமரிப்பில் இருக்கிறார். இதுபோல இன்னும் பல குடவரைச் சிற்பங்கள் அங்கு உள்ளன.

மலையரசி பற்றி கவியரசு...



தன் இஷ்ட தெய்வமான மலையரசி அம்மனைப் பற்றி கவியரசர் பாடிய பாடல்கள் ஆலய வளாகமெங்கும் எழுதப்பெற்றுள்ளன. அந்தப் பாடல்கள் நமது ஆசிரியரின் காமிராக் கண்களுக்குள் கிளிக் ஆனது.

லிங்கனின் சித்தி...

அமெரிக்கா அதிபரான ஆப்ரகாம் லிங்கன் தனது ஆட்சிக் காலத்தை வெற்றியுடன் நடத்தி வந்தார்.

ஆனால் அவரது இளமைக்காலம் மிகவும் வேதனையானது. கஷ்டப்பட்டு கூலி வேலை செய்யும் தாமஸ் லிங்கனுக்கு மகனாக பிறந்தவர் ஆப்ரகாம்லிங்கன். அவரைப் பெற்ற தாய் நான்ஸி. மரம் வெட்டி வாழ்ந்து வந்த அந்தக்குடும்பத்தில் வறுமைதான் ஆட்சி புரிந்து கொண்டிருந்தது.

லிங்கனின் தந்தையோ பெரிய குடிகாரர் வேறு. தன் மகன் ஆப்ரகாம் நன்றாக படித்து வருவதை அறிந்தும் அவரால் படிக்க வைக்கமுடியவில்லை

இந்தநிலையில் லிங்கனின் தாயார் நான்ஸி மரித்துப் போகிறார். தாயை இழந்த லிங்கன் சோகங்களை சுமந்துகொண்டு தளராத நெஞ்சுறுதியோடு கடுமையாக உழைக்கத் தொடங்கினார். மரம் வெட்டுவதுடன் தனது படிப்பையும் கவனமாக பார்த்துக்கொண்டார்.

லிங்கனையும், தன்னையும் கவனிப்பதற்கு ஒரு பெண்துணை தாமஸ் லிங்கனுக்கு தேவைப்பட்டது. 11 வயதில் பெற்ற தாயை இழந்த லிங்கனுக்கு தாயின் அரவணைப்பும் தேவையாயிருந்தது.

தாமஸ் லிங்கன் சாரா என்ற விதவைப் பெண்ணை மறுமணம் புரிந்து கொண்டார். தன் சித்தி சாராவை ஆப்ரகாம் லிங்கன் தன் சொந்த தாயைப்போல் நேசித்து பழகி வந்தார்.

ஆப்ரகாம் லிங்கன் மற்ற சிறுவர்களைப் போல சேட்டைகளும், துடுக்குத்தனங்களும் செய்வது போல் இல்லை. பெரியவர்களிடம் அன்பும் மரியாதையும் கொடுத்து, தன்னடக்கத்தோடு பழகி வந்தார்.

சாராவிற்கு ஆப்ரகாமை தான் பெற்ற குழந்தையை போல நேசித்து பராமரித்து அவர் மீது பாசம் பொழிந்தாள்.

கடுமையான உழைப்பால் படித்து, வழக்கறிஞராக ஆப்ரகாம் உயர்ந்து, பெயரும் புகழும் பெற்று விளங்கியதை கண்டு சித்தி சாரா பூரித்து மகிழ்ந்தாள்

ஆப்ரகாம் லிங்கனுக்கு ஜனாதிபதி ஆக பதவியேற்கும் வாய்ப்பு வந்தது அமெரிக்காவில் அப்போதைய செல்வந்தர்கள் நீக்ரோக்களை தங்களுடைய நிரந்தர அடிமைகளாக கொண்டிருந்தனர்

ஆப்ரகாம் வெற்றி பெற்றால் நீக்ரோ அடிமைத்தனத்தை ஒழிப்பார். ஆகவே ஆப்ரகாமை ஒழிக்கவேண்டும் என செல்வந்த வெள்ளையர்கள் ஒன்றுகூடி முடிவெடுத்தனர்.

ஆப்ரகாமின் சித்தி சாராவும் அந்த முடிவை அறிந்திருந்தாள். லிங்கன் ஜனாதிபதி தேர்தலுக்கு போட்டியிட போகுமுன் வளர்ப்புத்தாயின் ஆசீர்வாதம் கேட்டபோது சாரா, "மகனே ஆப்ரகாம், நீ ஜனாதிபதி ஆகவேண்டாம். எனக்கு மகனாக இருந்தாலே போதும் எனக்கு என் மகன் வேணும்" என்று கூறினாள். அதற்கு ஆப்ரகாம், "தாயே! உனக்கு மகனாக்கப்பட்ட நான் இந்த தேசத்தின் தலைவனாக வேண்டாமா...? நாட்டை சீர்திருத்தி நாட்டையும் மக்களையும் பேணுகின்ற பெரும்பொறுப்பு என்னைத் தேடி வருகிறது நீ வாழ்த்தவேண்டிய நேரத்தில் மறுக்கிறாயே தாயே!" என்று சொன்னதும், மனதார ஒப்புக்கொள்ளமுடியாமல் சாரா தவிக்க..

தேர்தலில் லிங்கனும் வெற்றி பெற்று ஜனாதிபதி மகுடம் சூட்டப்பட்டார்.

அன்றைய சூழ்நிலையில் ஆப்ரகாம் லிங்கன் சுடப்பட்டு இறந்தபோது சாரா மடியில் கிடத்தி, "மகனே போய்விட்டாயே! நீ இருந்து எனக்கு செய்யவேண்டிய சடங்குகளையெல்லாம் உனக்கு நான் செய்யவேண்டியாகிப்போனதே.." என்று கதறி அழுது "நீ எனக்கு வேணும் நீ எனக்கு வேணும்..." என்று சாரா கதறி அழுதாளாம்.

தான் பெறாமல் பெற்ற பிள்ளையாக கொண்ட அந்த தாயின் பாசம்தான் உலகிலேயே சிறந்த பாசம் என வரலாற்று வல்லுநர்களால் பாராட்டப்பட்டுள்ளது.

தாயன்பு எது...?

வாரியார் சுவாமிகள் அருளியது



நம்மீது எத்தனையோ பேர்கள் அன்பு செய்கின்றார்கள் தந்தை அன்பு செய்கின்றார். மனைவி அன்பு செய்கின்றாள். மகன் அன்பு செய்கின்றான். உடன் பிறந்தவர்கள் அன்பு செய்கின்றார்கள். ஆனால் தாய் செய்கின்ற அன்புதான் தலையாய அன்பு.

தாயன்புக்கு நிகரானது வேறு எதுவும் கிடையாது. தாய் நம்மை முன்னூறு நாள் சுமந்து. அங்கமெல்லாம் நொந்து பெறுகின்றாள். தன் உதிரத்தைப் பாலாக மாற்றித் தருகின்றாள். கண்ணை இமை காப்பதுபோல காத்து வளர்க்கின்றாள்.

நமக்கு இரண்டு தாயார் உண்டு. ஒன்று பெற்றதாய் மற்றொருதாய் இறைவன். தாய் இந்த உடம்பைப் பெற்றவள். இந்த பிறப்புக்கு மட்டும் தாய்.

இறைவன் பிறவிகள்தோறும் நமக்கு உதவுகின்ற தாய். அதனால் இறைவனைத் தாய் என்று கூறுகிறார் மாணிக்கவாசகர்

தாயான செல்வர்க்கே சென்றூதாய்
கோத்தும்பீ

தாயில் சிறந்த தயாவானதத்துவனே
எவ்வுயிர்க்குந் தாயானானை
- பெரியபுராணம்

எந்தாயும் எனக்கருள் தந்தையும் நீ
- கந்தரநுபூதி

நம் தாயாரைத் தங்க ஊஞ்சலில் வைத்துப் போற்றிப் பாலும் தேனும் ஊட்டி. மலர் மாலை சூட்டி வழிபட்டாலும். தாயார் நம்மை ஒருநாள் வளர்த்ததற்கு இணையாகாது.

சந்நியாசம் பெற்ற ஒருவனைக் கண்டு நிலத்தில் வீழ்ந்து வணங்காதிருந்தால் தந்தைக்கு நரகம். சந்நியாசம் பெற்ற ஒருவன் தாயாரைக் கண்டு நிலத்தில் வீழ்கவில்லையானால் அந்த சந்நியாசி நரகத்தை அடைவான் .

பற்றற்ற பரமஞானியும் தாயாரைப் போற்ற வேண்டும்.

சந்நியாசம் பெற்ற ஆதிசங்கரரும். பட்டினத்து. சுவாமிகளும் தாயாருக்குத் தகனகிரியை செய்தார்கள்.

தாய்தான் சிறந்த தெய்வம். தாய் பூமியைக் காட்டிலும் கஷமானவள் என்று யட்சப்ரச்னை கூறுகின்றது

"ஈன்றாளில் என்ன கடவுளும் இல்லை" என்பது நான்மணிக்கடிகை. இத்தகைய தாயன்பை அடியிற்கண்ட வரலாறு இனிது விளக்குகின்றது.

வடநாட்டிலே ஓர் அரசனிடம் சமஸ்தான வித்வானாகப் பெரும் புகழும் பெற்றுச் சீரும் சிறப்பும் எய்தி "ஸ்ரீ ஹீரன்" என்பவர் இருந்தார். இவர் வடமொழியில் வல்லவர். இவர் அரச சபையில் சூரியனைப் போல் விளங்கினார். அவருடைய வாக்கின் வன்மையைக்கண்டு மன்னன் மகிழ்ந்து அவருக்கு பல விருதுகள் வழங்கினார்.

ஒருநாள் அயல்நாட்டிலிருந்து ஒரு புலவன் வந்தான். கையில் யாளிமுகத் தோடாவும். வைரக்கடுக்கனும். நவரத்தின மோதிரங்களும். பொற்சரிகைப் போர்வையும் உடைய அப்புலவன் சீடர்கள் பலர்சூழ மிடுக்குடன் தோற்றமளித்தான்.

அப்புலவனுக்கும் ஆஸ்தான வித்துவானாகிய ஸ்ரீ ஹீரனுக்கும் கல்விப்போர் நிகழ்ந்தது அதில் ஸ்ரீ ஹீரன்

தோல்வியடைந்தார். அந்த அவமானத்தை அவரால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. அவருக்கு சிந்தாமணி என்ற மகாமந்திரம் தெரியும். அம்மந்திரம் சரஸ்வதிக்குஉரியது. அதனைப் பன்னிரு ஆண்டுகள் ஜெபித்தால் கலைமகள் தோன்றிக் காட்சி தருவாள். இல்லையேல் நடுஇரவில் பிணத்தின் மீது அமர்ந்து அச்சம் இன்றி பன்னிரெண்டு நிமிஷம் ஜெபித்தால் கலைமகள் காட்சி தருவாள். அவருக்கு ஸ்ரீஹர்ஷன் என்ற ஒரு சிறிய குழந்தை இருந்தது

அந்த மந்திரத்தை அந்த சின்னஞ்சிறு பாலகனிடம் ஒப்புவிக்கவேண்டும் என்று கருதினார். மந்திரத்தை உபதேசிக்ககூடிய வயது குழந்தைக்கு இல்லை. தன் மனைவி மாமல்லதேவிக்கு அந்த மந்திரத்தை உபதேசித்தார்.

"பெண்ணே! சிந்தாமணி என்ற இந்த மந்திரம் மிகச்சிறந்த அருமையும் பெருமையும் உடையது இதனை நமது மகன் ஸ்ரீ ஹர்ஷனுக்கு உரிய காலத்தில் நீ உபதேசம் செய். இம்மந்திரத்தை பயபக்தியுடன் பன்னிரண்டு ஆண்டு காலம் ஜெபித்தால் கலைமணி காட்சி தருவாள். இல்லையேல் நள்ளிரவில் பிணத்தின் மீது அமர்ந்து சிறிதும் அச்சமும் அருவருப்பும் இன்றி பன்னிரண்டு நிமிடங்கள் ஜெபித்தால் கலைமகள் காட்சி தருவாள். இது கிடைத்தற்கரிய அரிய பொக்கிஷம். இதனை மகனிடம் ஒப்புவிக்க வேண்டும்" என்று கூறினார்.

பின்னர். "மானம் இழந்த பின் வாழாமை முன் இனிது" என்ற வாக்கின்படி அவர் உயிர் துறந்தார். மனைவி மாமல்லதேவி கணவனாருடைய பிரிவைக் குறித்துப் பெரிதும் வருந்தினாள் மந்திரத்தை மகனிடம் ஒப்புவிக்கும் பொருட்டு உயிர் தாங்கிக் கொண்டிருந்தாள்

சிறிது குழந்தைக்கு வயது வந்தபின் அம்மந்திரத்தை அக்குழந்தைக்கு உபதேசித்தாள் அம்மந்திரத்தை சதா உச்சரிக்கும் பயிற்சியை அக்குழந்தைக்குத் தந்தாள். தன் மகன் பன்னிரண்டு ஆண்டுகள் ஜெபித்தால்தானே வாணிதேவியின் தரிசனம் கிடைக்கும்? அத்தனை நாள் தாமதிக்காமல் அதிவிரைவில் அன்னை கலைமகளின் அருளைத் தன் அருமை மகன் பெறவேண்டும் என்று ஆசைப்பட்டாள்.

ஒருநாள் இரவு 15 நாழிகை நள்ளிரவு தன் வீட்டுக்கூடத்தில் அவள் மல்லாந்து படுத்துக்கொண்டாள் மகனை மார்பு மீது வைத்துக் கொண்டாள் "கண்ணா உனக்குச் சொன்ன மந்திரத்தை நீ சொல்லிக்கொண்டே இரு. அப்படிச் சொல்லிக் கொண்டிருந்தால் உனக்கு நிரம்ப பட்சணம் தருவேன். விளையாட்டுச்சாமான் வாங்கித் தருவேன்" என்றாள். அவள் இட்ட திட்டத்தை குழந்தை அறியாதுதானே? தாயின் மார்பில் அமர்ந்திருந்த ஸ்ரீ ஹர்ஷன் மந்திரத்தை இடையறாது ஜெபித்துக் கொண்டிருந்தாள்.

தாய் விளக்கை அணைத்தாள். முன்னமேயே படுக்கைக்குள் ஆயத்தமாக வைத்திருந்த வடிவாளை எடுத்துத் தன் தலையைத் துண்டித்துக் கொண்டாள். குழந்தை இதை அறிந்து கொள்ளவில்லை. மந்திரத்தை ஜெபித்து கொண்டேயிருந்தது. நள்ளிருளில் பிணத்தின் மீதிருந்து மந்திரத்தை ஜெபித்ததால் கலைமகள் அன்னவாகனத்தில் தோன்றி ஆயிரம் சந்திரோதயம் போல் காட்சி அளித்தாள்.

அந்த அருள் ஒளியில் வாணிதேவியை குழந்தை தரிசித்தது அதேநேரத்தில் தன்னைப் பெற்றெடுத்த அன்னை மாண்டிருக்கக் கண்டது. இந்தத்தாயை நோக்கி அழுவதா? அந்தத்தாயை நோக்கித் தொழுவதா? என்று எண்ணித் திகைத்தது.

கலைமகள் அக்குழந்தைக்குப் பூர்ணமான அருளை வழங்கி கலைஞானத்தை தந்தருளினாள் ஸ்ரீஹர்ஷன் பெற்ற தாய் மீண்டும் உயிர்ப்பிக்க பிரார்த்தனை செய்ய மாமல்லதேவியும் உயிர் பெற்று எழுந்தாள். தாயன்பு சிறந்தது என்பதை இது காட்டுகிறது



யார் குரு...?

குரு. ஜீவாத்மாக்களை மெய்ஞ் ஞானத்தை நோக்கிச் செலுத்தும் விஷயத்தில் ஒரு மானைப் பிடிக்கப் பயன்படுத்தும் மற்றொரு ஈர்ப்பு மான் (Decoy) போன்று விளங்குகிறார்.

மனிதனுக்கு ஆன்மாவைப் பற்றிய உண்மையை அறிவித்து அவன் மனதை அகநோக்கிற்குத் திருப்பும் பணியைச் செய்யும் எதையும், எவரையும் குரு என்று சொல்லலாம். இந்த அர்த்தத்தில் தனக்குப் பல குருமார்கள் இருந்ததாக பாகவதத்தில் அவதூதர் தத்தாத்ரேயர் கூறியுள்ளார்.

ஏற்கனவே நன்றாகப் பக்குவப் பட்டிருக்கும் நிலையிலுள்ள அரிதான சிலருக்கு வெளியே குரு என்று ஒருவர் தேவையில்லை. அவர்கள் நேரிடையாகவே உள்ளொளி மூலம் ஆன்மவிளக்கம் பெற முடியும். ஆனால் இத்தகையவர்கள் மிகவும் அபூர்வம்.

குருவின் உண்மையான பணி உனக்குள் ஆன்மீக விழிப்பை ஏற்படுத்துவதும். மாயையிலிருந்து விடுதலை பெறுவதற்காக உன்னை உள்முகமாகத் திருப்பி விடுவதுமாகும்.

வெளியுலகில் மனித உருவத்தில் வெளிப்படும் கடவுள் அல்லது ஆன்மாவே குரு ஆவார்.

மனிதனை அவனுடைய மூலத்திற்கு அழைத்துச் செல்வதற்காகக் கடவுள் குருவாக வடிவம் பெறுகிறார்.

ஆன்மாவின் எல்லையற்ற ஆழ்நிலையில் எப்போதும் குடி கொண்டிருப்பவரே குரு என்று சொல்லப்படுகிறார்.

வெளியே இருக்கும் குரு. உள்ளத்தில் உள்ள குருவை அல்லது இதயத்தின் ஆன்மாவைப் பிரதிபலிக்கிறார்.

ஒரு குருவின் மீது முழு அளவில் ஆழ்ந்த நம்பிக்கை இல்லாவிட்டால், குரு என்று ஒருவர் இருந்தும் அவரால் சீடன் பயனடைய மாட்டான்.

குரு என்பவர் மனிதனையும் கடவுளையும் இணைத்து வைக்கும் ஓர் இணைப்பாளராக விளங்குகிறார்.

உடலுடன் இருக்கும் குரு அந்த உடலை உகுத்துவிட்ட நிலையிலும் குருவாக்வே இருந்து சீடனுக்கு வழி காட்டமுடியும்.

மணி கேட்டார்
திரு. வி.க.

தமிழ்த்தென்றல் திரு. வி.க. அவர்கள் கண்பார்வை மங்கிப் படுக்கையில் இருந்தபோது மணி பார்க்க விரும்பினார்.

எனவே அவர் அருகில் இருந்த ஒருவரிடம், "கால அளவினைக் கடிதில் நோக்குக" என்றார்.

மணிபார்த்தவர், **"அஞ்சு முகனோடு ஆறுமுகனும், அவன் குஞ்சு மணியினொடு குகனும்"** என்றார். இதன் விளக்கம் புரிகிறதா...?

அஞ்சுமுகன்-5, ஆறுமுகன்-6, குஞ்சுமணி-அரை, குகன்-கால். அதாவது மணி 11-45 என்பது பொருள்.

பிள்ளையார்பட்டியில் வாடாமலர் மங்கை

முரு.லெ. முருக்கப்பன், காரைக்குடி

முன்னொரு காலத்தில் இந்தியாவில் மொகலாயர் படையெடுப்பு இருந்த சமயம்... அப்போது மொகலாயப்படையினர் நமது நாட்டின் அரிய பொக்கிஷங்களாகவும், வழிபாட்டுத்தெய்வங்களாகவும் காத்து வந்து கொண்டிருந்த சிலை, சிற்பங்கள் முதலியவற்றை உடைத்தும் கொள்ளை அடித்தும் சென்றார்கள்.

ஆகவே நமது முன்னோர்கள் மொகலாயர் படையிலிருந்து அந்த சிலை, சிற்பங்களைப் பாதுகாக்கும்வண்ணம் பூமிக்கு அடியில் புதைத்து வைத்து பாதுகாத்து வந்தனர்.

அப்போது பிள்ளையார்பட்டியில் இருந்த அசோககுஸமாம்பாள் என்னும் தெய்வ சிற்பத்தை பூமிக்கு அடியில் புதைத்து வைத்திருக்கிறார்கள். அப்படிப் புதைக்கும்பொழுது அம்பாள் தலையில் ஒரு மலரையும் சேர்த்து வைத்துப் புதைத்திருக்கிறார்கள். மொகலாயர் படையெடுப்பு முடிந்த பின்னர் அம்பாள் சிலையை தோண்டி எடுத்திருக்கிறார்கள். அம்பாளின் தலையில் வைத்து புதைக்கப்பட்ட மலர் வாடாமல் அப்படியே அன்றலர்ந்த மலர் போல் இருந்ததாம். அன்றிலிருந்து வாடாமலர் மங்கை என்ற காரணப்பெயரிட்டு வழிபட்டு வருகின்றனர்.

DOMESTIC TERM DEPOSITS

15 days to 29 days	5.50%	1 year and above but less than 2 years	10.00%
30 days to 60 days	6.50%	2 years and above but less than 3 years	10.50%
61 days to 90 days	7.50%	3 years and above	11.00%
91 days to 180 days	8.50%		
181 days to less than one year	9.50%		

LESS THAN 2 YEARS

Single Deposit over 0.5% over the rate
Rs. 15.00 lakhs prescribed above
The revised interest rate structure for NRE & NRNR Term Deposits

PRECLOSURE OF TERM DEPOSITS

Preclosure of Deposit Within 14 days from the date of Deposit	No interest payable
Preclosure between 15th day and 29th day	2% less than the applicable rate
Preclosure after 29 days (ie. 30 days & above)	1% less than the applicable rate

FOR NRI DEPOSITS
NRE TERM DEPOSITS

6 months to less than 1 year	9.50%
1 year and and above but less than 2 years	10.00%
2 years and above but less than 3 years	10.50%
3 years and above	11.00%

NRNR TERM DEPOSITS

6 months and above upto 3 years	11.0%

DEPOSITS UNDER FCNR (BANK) SCHEME

Period	Rate of Interest (% p.a.)		
	GBP	USD	DEM / EURO
1 year to 3 years	5.75	5.75	3.25

ROC M7 331178/81 dt. 7-5-82
NAGARATHAR KURAL